விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆனி 32 ஜுலை 8 இதழ் 155

யாழ்ப்பாணம் புதன்கிழமை 16-7-1986

3 நிபந்தனைகள் ஏற்கப்பட்டால்—

## போராளிகள் போராட்டத்தை கைவிட்டு அரசியலில் ஈடுபடலாம் - குமாரணதுங்கா கருத்து

கொழும்பு, செவ்வாய்

பயங்கரவாதத் தடைச் சட்டம் வாபஸ்பெறப்படும், வடக்குகிழக்கு இணைந்தமாநில சுயாட்சி வழங்கப்படுவதுடன் போராளிகளுக்கு பொது மன்னிப்பும் வழங்கப்கப்பட்டால், தமிழ்ப் போராளிகள் தமதுஆயுதப்போராட்டத்தைக் கைவிட்டு உள்ளூர் அரசியலில் ஈடுபடவிரும்புவரெனத் தாம் கருதுவதாக ஸ்ரீலங்கா மக்கள் கட்சி செயலாளர் திரு விஜயகுமாரணதுங்க தெரிவித்தார்.

திரு. குமாரதுங்க, தமது இரண்டாம் கட்ட இந்திய விஜயத்தினை முடித்துக் கொண்டு நேற்று நாடு திரும்பியபின் தமது விஜயம் பற்றி கருத்துத்தெரிவிக்கையிலேயே இதனைக் கூறியுள்ளார்.

மேற்கூறிய மூன்று நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட்டால் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. பிரபாகரன் கூடஉள்ளூர் அரசியலில் ஈடுபடத் தயாராயுள்ளார் எனத் தமது இந்திய விஜயத்தின் பின்னர் தான் முடிவெடுத்துள்ளதாக தெரிவித்த திரு. குமாரணதுங்க, வடக்கு-கிழக்கு பகுதிகளில் யுத்த நிறுத்தத்தைக்கொண்டுவர தான் முயற்சிக்கப் போவதாகவும், தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய யோசனைகளை அமுல்நடத்த சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுவதை தாம் எதிர்ப்பதாகவும் இத்தகைய ஒரு நடவடிக்கையை புத்தசருமாரும் வேறு இனவாத சக்திகளும் இவ் யோசனைகளை மக்கள் நிராகரிக்கச் செய்ய உபயோகிப்பர் எனவும் திரு குமாரணதுங்க

[5 ம் பக்கம் பார்க்க]

● மாகாண இணைப்பு, எல்லைமாற்றத்தை—

# இ. தொ. க. உட்பட ஏழு கட்சிகள் நிராகரிப்பு!

கொழும்பு, புதன்

**இரு மாகாணங்கள் இணைக்கப்படுவதையும், தற்போதைய மாகாணங்களின் எல்லைகளில் மாற்றங்கள் கொண்டுவரப்படுவதையும் இ. தொ. க. உட்பட ஏழு அரசியல் கட்சிகள் நிராகரித்துள்ளன. ஜனாதிபதி நேற்றுக் கூட்டிய அரசியல் கட்சிகளின் மாநாட்டிலேயே இக்கட்சிகள் மேற்கண்ட தமதுமுடிவை வெளியிட்டன. அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் மட்டும் இரு மாகாணங்கள் ஒன்றிணைவதை வலியுறுத்தியது.**

இனப்பிரச்னைக்குத் தீர்வு காணப்படுவது தொடர்பான அரசியல் கட்சிகளின் இரண்டாவது சுற்று மகாநாடு நேற்று பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் காலை பத்து மணிக்கு ஆரம்பமானது. ஜனாதிபதி ஜயவர்த்தனா இம்மகாநாட்டுக்கு தலைமை வகித்தார்.

தமிழர்விடுதலைக்கூட்டணி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மக்கள் ஐக்கிய முன்னணி ஆகிய மூன்று கட்சிகளும் நேற்றைய மகாநாட்டில் கலந்து கொள்ளவில்லை.

கடந்தமாதம் 25ந் திகதி இடம் பெற்ற அரசியல் கட்சிகள் மகாநாட்டில் தெரிவிக்

(5ம் பக்கம் பார்க்க)

அரசியல்கட்சி மகாநாட்டில்

## வெலிக்கடை சிறையில் தமிழ் இளைஞர் நிலைபற்றி மகஜர்! தமிழ் காங்கிரஸ் கையளித்தது

கொழும்பு, புதன்.

வெலிக்கடைச் சிறையிலுள்ள 246 தமிழ் இளைஞர்கள் அங்கு எதிர் நோக்கும் பிரச்னைகள் பற்றிய பூரண விபரங்கள் அடங்கிய 10 பக்க மகஜரொன்றை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் நேற்று அரசியல் கட்சி மாநாட்டின்

(5 ம் பக்கம் பார்க்க)

வாழைச்சேனை காகித ஆலையில்—

## $5\frac{1}{2}$ லட்சம் பெறுமதியான பொருட்கள் கொள்ளை

மட்டக்களப்பு, புதன்

வாழைச்சேனை காகிதஆலைக்குள் நுழைந்த சுமார் 15 துப்பாக்கிநபர்கள் ஐந்தரை லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களைக் கொள்ளை அடித்துச் சென்றுள்ளனர்.

நேற்றிரவு 9 - 15 மணியளவில் இக்கொள்ளைச்சம்பவம் இடம் பெற்றது.

வாழைச்சேனை காகித ஆலைக்குள் புகுந்த நபர்கள் அங்கிருந்த சகல ஊழியர்கள் இடுப்பிலும் 'கிறனேட்'டுகளை இணைத்து தடுத்து விட்டு பெருமளவு உபகரணங்களை

(5ம் பக்கம் பார்க்க)

## த. வி. கூவினர் கனடிய தூதுவர் சந்திப்பு

கொழும்பு. புதன்.

இலங்கை வந்துள்ள த. வி. கூ. பிரமுகர்களை இலங்கைக்கான கனடியத்தூதர் திரு. கொலகொட், தமது தூதராலயத்தில் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தினர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற இக்கூட்டத்தில் அரசின் புதிய யோசனைகள் பற்றிய த வி. கூ. வின் நிலைப்பாடு, சமாதான தீர்வொன்றைக்காணஎடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராயப்பட்டனவெனத் தெரிகிறது.

த. வி. கூ. சார்பில் இச்சந்திப்பில் செயலதிபர் அமிர்தலிங்கம், தலைவர் திரு. சிவசிதம்பரம் ஆகியோர் கலந்து கொண்டனர். (ய-செ)

மாகாணசபை

## யோசனை அம்சங்களுக்கு ஐந்து விசேட குழுக்கள்

கொழும்பு புதன்

உத்தேச மாகாணசபை யோசனைகள் சம்பந்தமாக நேற்றுக்கூடிய அரசியல்கட்சி மகாநாட்டில் அமைச்சர்கள் தலைமையில் ஐந்து குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

பொதுவான அதிகார பரவலாக்கல் சம்பந்தமான குழுவுக்கு பிரதமர் ஆர். பிரேமதாஸாவும், அமைச்சர் ரணில் விக்கிரம சிங்காவும் தலைமை தாங்குவர்.

அரசியல் கட்சி மகாநாட்டு அரசியல் பரிசீலிப்பு அமுலாக்கல் குழுவுக்கு அமைச்சர் கே டபிள்யு தேவநாயகம்பொறுப்

(5ம் பக்கம் பார்க்க)

யாழ். மக்களுக்கு ஓர் நற்செய்தி

யாழ். நகர் செல்லமுடியாத நிலையில், பாதுகாப்பான சூழலில் உங்களின் நன்மை கருதி பதனிடப்பட்ட கடல்உணவுப் பொருட்களும், இறைச்சி வகைகளும் [இன்று] 16-07-1986 புதன்கிழமைமுதல் மொத்தமாகவும், சில்லறையாகவும் விநியோகிப்போர்.

A. P. A. T.

இல: 11, திருநெல்வேலி சந்தை

முன்பாக (மேல்மாடி)

திருநெல்வேலி.

T. P. 22029.

உங்கள் தேவையே எங்கள் சேவை

உங்கள் ஒத்துழைப்பு

எமக்கு அவசியம் தேவை.

[C-3498]

கடல் கண்ணிவெடியில்

## கடற்படை பீரங்கி விசைப்படகு சேதம்! - புலிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், புதன்.

''காரைநகர் கடற்படையினரின் இறங்குதுறையருகில் காவலுக்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த பீரங்கி பொருத்திய அதிநவீன விசைப்படகு தமது இயக்கப் போராளிகளால் வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடிக்கிலக்கானதால் அப்படகு சுக்கு நூறாகியதுடன் படகிலிருந்த அனைவரும்கொல்லப்பட்டனர்''

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''நேற்று அதிகாலை 3 மணியளவில்காரைநகர் கடற்படையினரின் இறங்குதுறையருகில் காவலுக்குநிறுத்திவைக்கப்பட்டிருந்த பீரங்கி பொருத்திய அதிநவீன விசைப்படகொன்று ஏற்கனவே எம்மால் அங்கு வைக்கப்பட்டிருந்த கடல் கண்ணி வெடியினை வெடிக்கச் செய்ததில் அப்படகில் இருந்த அனைவரும் இதனால் கொல்லப்பட்டனர். படகின் ஒரு பகுதியையாவது இவர்களால் மீட்கமுடியவில்லை இத்தாக்குதலின்போது எமதுதரப்பில் எதுவித இழப்புகளும் இல்லை. கடற்படையினர் முகாமில் இருந்து ஷெல் தாக்குதல் நிகழ்த்தினர்.'' [மா]

தொலை தொடர்பு

## பெண் ஊழியர் பண்ணை அலுவலகம் செல்ல மறுப்பு

யாழ்ப்பாணம், புதன்

யாழ் தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தில் கடமை புரியும் பெண் ஊழியர்கள் பண்ணையிலுள்ள தொலைபேசி நிலையத்துக்குச்சென்று கடமை புரிய மறுத்துள்ளனர் எனத் தெரிய வருகிறது.

பண்ணையிலுள்ள தொலைபேசி நிலையத்துல் சகல ஊழியர்களும் இன்று புதன்கிழமை முதல் கடமையாற்றவேண்டும் என மேலிடம் பணித்திருந்த போதிலும் பெண் ஊழியர்கள் பாதுகாப்பின்மையால் அங்கு சென்று கடமையாற்றவிரும்பவில்லை எனத் தெரிகிறது.

ஆயினும், ஆண் ஊழியர்கள் இன்று அங்கு சென்று கடமை புரியலாம்என நம்பப்படுகிறது.

யாழ். தொலைபேசி நிலையத்தில் சுமார் 40 பெண்கள் கடமைபுரிகிறார்கள்.

பண்ணையிலிருந்த தொலைபேசி நிலைய ஊழியர்கள் தற்சமயம் பருத்தித்துறை வீதியில் உள்ள தற்காலிக காரியாலயத்தில் கடமைபுரிகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. [ஜ]

## வரி விளம்பரம்

### தேவை

யாழ். நகரில் வளர்ந்துவரும் ஒரு ஹோட்டலுக்கு Stewards —Cooks தேவை. அனுபவ சான்றிதழ்களுடன் நேரில் வருக, Old Park Chinese Restaurant 207, Old Park Road, Jaffna. C 3470

### விற்பனைக்கு

அல்சேஷன் தனி ரக நாய்க் குட்டிகள் குறைக்கப்பட்ட விலையில் விற்பனைக்குண்டு ஐந்து கிழமைகள். திருநெல்வேலி சிவன் கோவில் வீதி, கோவில் வீதி சந்தி. 181 Temple Road Nallur

(C 3495)

### சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது) சுன்னாகம்

### அறிவித்தல்

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 1000ற்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகளும், கழிவு சீனியும் கேள்விப் பத்திரமூலம் விற்பனைக்கிருக்கின்றன.

வெற்றுச் சாக்குகளுக்கு ரூபா 250/-உம், ஏனையவற்றிற்கு ரூபா 50/-உம் மீளளிப்பு வைப்புப் பணமாகச் சங்கத்தில் செலுத்திச் சங்க வேலை நாட்களில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் 23-7-86 நண்பகல் 12-00 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப் படும்.

பொதுமுகாமையாளர்
15-7-86
சுன்னாகம் பல நோ.கூ.சங்கம்.
[A 935]

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## எச்சரித்து விடுதலை

கிளிநொச்சி, செவ்,

சாவகச்சேரி நகரில் ஆபாச திரைப்படம் காட்டியவரின் ரீ வி., டெக், திரைபடச் சுருள் முதலானவற்றை இளைஞர் கோஷ்டி ஒன்று பறிமுதல் செய்ததுடன் சம்பந்தப்பட்டவர்களை எச்சரித்து விடுதலை செய்துள்ளது

### வாடகைக்கு

பளையில் கண்டி வீதியில் கொம்பனி ஸ்ரோர் சந்தோர் தொழிற்சாலை, போடுவதற்கு ஏற்ற வீடு வாடைகைக்கு உண்டு. தொடர்பு- இல. 22 3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

(C 3485)

### சேவை

நவீன யந்திரமூலம் அனுபவ மிக்க தொழிலாளர்களினால் கச்சான் முழுப்பருப்பாக மொத்தமாகவும், சில்லறையாகவும் உடைத்துக் கொடுக்கப்படும் விபரங்களுக்கு: M G M 777, K K S. Rd, Jaffna. T P:- 22611.

[A-926]

யாழ் நகரில் தரமான ''போட்டோஸ்ரற்'' பிரதிகள் தெளிவான ''ஶ்ரூனியோ'' பிரதிகளைத். திருப்தியான முறையில் பெற்றுக்கொள்ள; கிளீன்கட், 239 மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.

(C 3488)

வெளிநாடு செல்வதாலோ வேறு காரணத்தாலோ உங்கள் காணி, வீடு, தளபாடங்கள், மின் உபகரணங்கள் வாகனங்கள் போன்ற எதனையும் விற்க நீங்கள் விரும்பினால் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள் சிரமமின்றியும் விரைவாகவும் நல்ல விலையிலும் உங்கள் பொருள்களை விற்க ஒழுங்கு செய்வோம் Mack Auctioneers and Brokers. No: 8, 1st Lane Pointpedro Road, Jaffna. Te: 24791 24836. A 932

## இசை நடனப் போட்டிகள்

யாழ்ப்பாணம், புதன்

யாழ் சுண்டுக்குழி மகளிர் கல்லூரியில் இன்று நடைபெற விருந்த யாழ்ப்பாணக் கல்வி வட்டாரப் பாடசாலைகளுக்கிடையேயான இசை, நடன நாடகப் போட்டிகள் 19 ம் திகதி அன்று நடைபெறும் என்று யாழ்ப்பாண வட்டாரக் கல்வி அதிகாரி இ சிவானந்தன் அறிவித்துள்ளார்.

## 'ஹெலி' நடமாட்டம்

### விவசாயிகள் அச்சம்

சாவகச்சேரி, செவ்,

கைதடி மேற்குப்பகுதியில் உள்ள வயல் வெளிகளின் மேலாக ஹெலிகொப்டர் அடிக்கடி மிகவும் தாழப் பறந்து செல்வதன் காரணமாக, அப்பகுதி விவசாயிகள் பெரிதும் அச்சத்துக்குள்ளாகி வருகின்றனர்.

ஹெலிகொப்டரின் சத்தம் இப்பகுதியில் கேட்கத் கேட்கத் தொடங்கியதும் வயல் மக்கள் அச்சம் கார பாதுகாப்புத் தேடி ஓடி ஒளிக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. எனத்தெரிய வந்துள்ளார்.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



ந. உதயசங்கர் (இந்தி, சங்கர்)

அன்னை மடியில்:
11-05-1967

அநியாய அழிப்பு:
16-06-1986

விண்ணுக்கு உன் உயிர்-
தாய்
மண்ணுக்கு உன் உடல்-
மனப்
புண்ணுக்கு மருந்து அது
என்
கண்ணுக்குத் தெரியுதடா
இந்திரா.

இனபேதமற்ற ஈழத்
தமிழ்நாடு
இனம் ஒன்றுபட்டால்
அது
கனதூரம் இல்லை நாம்
ஈழமதை கண்டு மகிழ
எனக் கூறிநின்றாய் கழக
உறுப்பினராய் சங்கர்.

கலைப் பொருட்காட்சிக்
காக,
கவின் பொருள் ஆக்க-
வென்று
அலைகடற் செல்வங்களை
அள்ளி நீ ஆய்ந்தாய்
விலைப் படை வீணர்கள்
வேட்டால்,
அன்று விண்மிசை
சென்றாய்
நிலைப்பட உன்தன்
கொள்கை நிற்கின்றார்
நிரையில்.

இங்ஙனம்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

காளிகோயிலடி,
இடைக்காடு,
அச்சுவேலி. C 3490

## பண்டிதமணி நினைவாக இரு நூல்கள்

யாழ்ப்பாணம், புதன்

மூதறிஞர் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை நினைவாக அவர் எழுதிய கட்டுரைகள் 'செந்தமிழ்க் களஞ்சியம்' என்ற தலைப்பிலும், பண்டிதமணி பற்றி இலங்கை இந்திய அறிஞர்கள் எழுதிய கட்டுரைகள் ஆராய்ச்சி மலர் வடிவிலும் அடுத்தமாதம் வெளிவர இருக்கின்றன.

பரந்த அடிப்படையில் யாழ்பாணத்தில் நடைபெறவுள்ள நினைவஞ்சலிக் கூட்டத்தில் இந்நூல்கள் வெளியிடப் படுமென்றும் அதையடுத்துப் பண்டிதமணியை என்றும் நினைவு கூரும்வகையில் பல்கலைக்கழகமட்டத்தில் ஒருவருக்குப் புலமைப்பரிசில் வழங்கும் திட்டம் அமுலாவதற்கு வேண்டியன செய்யப்படுமென்றும் அடுத்த ஆண்டு மார்ச் 13ந் திகதி பண்டிதமணி நினைவாக நினைவுப் பேருரையொன்றை நடத்துவதற்கு விஷேச ஏற்பாடுகள் செய்யப்படுமென்றும் இதற்கான ஏற்பாடுகளை பண்டிதமணி நூல்வெளியீட்டுச் சபை கவனித்து வருகிறதென்றும் பண்டிதமணி நூல்வெளியீட்டுச்சபையின் காரியதரிசி திரு அ பஞ்சாட்சரம் தெரிவிககின்றார் [ஐ]

## அஞ்சலி

வேலணை, செவ்,

வேலணை, புங்குடுதீவு, ஊர்காவற்றுறை ஆகியபகுதிகளிலும் அதனை சுற்றியுள்ள ஏனைய பகுதிகளிலும் படகு விபத்தில் மரணமான மக்கள் விடுதலை படைப் போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக வீதிகள் தோறும் தோரணங்கள் தூக்கப்பட்டு எங்கும் கறுப்பு கொடிகள் பறக்கவிடப்பட்டன, கடைகள் நண்பகலுலுக்கு பின் மூடப்பட்டன

## 41-ம் நாள் நினைவஞ்சலி



இ. சண்முகநாதன்

தோற்றம்: 26-10-1953

மறைவு: 06-06-1986

அன்புடனும் பாசத்துடனும் வாழ்ந்து எம்மைக் காப்பாற்ற அயராது உழைத்து எம்மையெல்லாம் உயரவைத்த உத்தமரே, எங்களை ஆறுத்துயரில் ஆழ்த்திவிட்டுத் திடீரென அணைந்து விட்ட அன்புத் தெய்வமே. நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவும் செயலும் என்றும் எம் உள்ளத்தை விட்டு அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ராமசாமி
தெய்வானைப்பிள்ளை,
சின்னத்துரை
சிவபாக்கியம்
கமலேஸ்வரி,
கார்த்திகன்.

சின்னத்துரை
[சோதிடர்],
ஊரெழு மேற்கு,
சுன்னாகம். C 3472

## 5-வது ஆண்டு நினைவஞ்சலி



டாக்டர்
சி. ராஜேந்திரா
(R. M. P.)

மலர்வு: 18-07-27

மறைவு: 11-07-81

அன்பின்பிறப்பிடமாய் அமைதியின் இருப்பிடமாய் பொதுநலசேவை புரிந்து எம் குடும்பவழி காட்டியாய் திகழ்ந்த தெய்வமே நீங்கள் எங்களை விட்டு எதிர்பாராது பிரிந்து இறைவனடி சேர்ந்து இன்றுடன் 5 ஆண்டுகள் பூர்த்தியாகி விட்டன. உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

மனைவி புஷ்பலீலா,
பிள்ளைகள்:
சிவக்குமார், பிரதீப்,
ஷகிலா.

43, சீனிவாசகம் வீதி,
கொட்டடி.
யாழ்ப்பாணம்.
(C 3491)

## 31-ம் நாள் நினைவஞ்ச[illegible]



பொன்னுத்துரை (டெனு) குணராசா

அன்னை மடியில்:
1962-02-25

ஆண்டவன் அடியில்:
1986-06-16

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே! உனக்குத் தாயும் இல்லை. தந்தையும் இல்லை. நாங்கள் உனக்குத் தாயும் தந்தையுமாகி உன்னை அன்போடு பேணி வளர்த்தோம். நாட்டின் சுதந்திரமே இறுதிமூச்சு என்று கூறுரைத்து அகால மரணமடைந்தாய்

உனது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்:

அக்காமார்கள்,
அத்தான்மார்கள்,
அண்ணன்மார்,
அண்ணி, தம்பி,
மருமக்கள்,
உறவினர்கள்..
(C 3496)

## கொப்பரு தேவை

வாங்குபவர்:

ச. சேதுகாவலர்,

47, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(வள்ளுவர் சிலையடி) (A 790)

# LADIES' ACADEMY

(REGD No 15918)

VICTORIA ROAD
(Near Subhas Tourist Hotel)
JAFFNA

Phone: 22365

## டிப்ளோமா மனையியல் வகுப்புக்கள்

1. கேக் ஐசிங்
2. பூ வேலை
3. கைவேலை (மக்ரம், பொம்மை, நூல்வேலை)
4. தையற்கலை
5. சமையற்கலை
6. கூந்தல் அலங்காரம்
7. கோலம்
8. கண்ணாடிகளிலும் துணிகளிலும் வர்ணம் தீட்டுதல்
9. ஆங்கிலம்

இத்துடன் இலவச முதலுதவி வகுப்புக்களும் நடைபெறும்.

★ பயிற்சிகள் யாவும் 9 மாத காலம் நடைபெற்று சான்றிதழும் வழங்கப்படும்.

**புதியவகுப்புக்கள் ஆரம்பம் 18-07-86**

[C3492]

# சென்னைக்கருகில் இந்தியக் கடற்படை ஒத்திகை

## விமானந்தாங்கி, விக்ராந்த்' கப்பலும் பங்கேற்றது

சென்னை, யூலை 15

தமிழ்நாட்டில் சென்னைக்கு சுமார் 50 கி மீ, தூரத்துக் கப்பால் வங்கக்கடலில் நேற்று முன்தினம் கடற்படை பயிற்சியில் ''விக்ராந்'' விமானம் தாங்கிக்கப்பலும் மற்றும் 4 போர்க் கப்பல்களும் பல போர் ஒத்திகை பயிற்சிகளை நடாத்தின.

மிக அதிவேகமாகப் பாய்ந்து விரைவாக தாக்கும் ''சீ கரியர்' விமானங்களை தாங்கியிருப்பது விக்ராந்தின் சிறம்பம்சமாகும்.

தேவையேற்படின் செங்குத்தாக எழும்பி தாக்குதலுக்கு விரைந்து செல்லும் இச் ''சீ கரியர்'' விமானங்கள் ஒருமித்து இலக்குகளை தாக்குவதில் குறிதவறாது செயற்படுமென பல இடங்களில் நிரூபித்துக்காட்டின.

இவற்றுக்குத் துணையாக ''அலிஸ்'' போர் விமானங்களும எதிரியின் இலக்குகளை தாக்க சிறந்த சாதனங்களைக் கொண்டு செயல்படுகின்றன என கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

இவ்வாறான விமானங்களையும் இதரகருவிகளையும்கொண்டுள்ள போர்க்கப்பலை எதிரியின் நீர்மூழ்கி கப்பல்கள் தாக்க முனைந்தால் இதனை தடுப்பதற்கும், எதிரிநாட்டு நீர்மூழ்கி கப்பல்களின் நடமாட்டத்தை கண்காணிப்பதற்கும், விசேஷ கருவிகள் கொண்ட நீர்மூழ்கி எதிர்ப்பு ஹெலிகொப்டர்கள் இக்கப்பலிலிருந்து செயல்பட்டு பாதுகாக்கும் அம்சம் வெகு சிறப்பாக இருந்தது.

இவற்றின் அனைத்து பணிகளும் ஒருமித்து செயல்படும் போது விமானந்தாங்கி விக்ராந் இந்திய கடல் பாதுகாப்புக்கு மாபெரும் அரணாக விளங்குமென்று கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

செய்தியாளர்கள் பலர் நேரில்பார்த்த இப்போர் ஒத்திகை அவர்களை மெய்சிலிக்க வைத்ததாக கூறினார்கள்

இப்போர்ப்பயிற்சிகளில் வேறும் 4 போர்க்கப்பல்களும் ஐ என். எஸ் ''கராஞ்'' எனும் நீர்மூழ்கி கப்பலும் கலந்துகொண்டன.

கடலின் ஆழத்திலுள் எதிரி இலக்குகளை குறியாத் தாக்குதல், வானத்தில் வட்டமிடும் எதிரி விமானத்தை அறிந்து அழித்துவிடுதல், ஒரு கப்பலிலிருந்து மற்றொரு கப்பலிற்கு வல்லுநர்கள், உணவுப் பொருட்கள் தேவைப்படும் சமயம் மாற்றிக்கொள்ளுதல், கப்பல் விமானம் மற்றும் தரைப்படைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுவது ஆகியவை இதன் சிறப்பம்சமாகும்.

இக்கப்பல் இம்மாத இறுதி வரை இந்தப்பகுதியில்நிறுத்தி வைக்கப்படுமென செய்தி வந்துள்ளது. [சிவ]

## ''வடக்குக் கிழக்கு தமிழ்ப் பிரதேசங்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும்''

கொழும்பு, செவ்.

''தமிழருக்கு ஏற்புடையதான தீர்வொன்று காணப்படுவதில் தான் இலங்கைத் தமிழரின் எதிர்காலம் தங்கியுள்ளது அத்தகையதொரு தீர்ப்பு சிங்கள மக்களினதும் அரசினதும் நல்லெண்ணததிதும் தங்கியுள்ளது.''

இவ்வாறு அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் கூறியுள்ளார்.

கொழும் சட்டக் கல்லூரியில் கடந்த வெள்ளிக்கிழமை 'இலங்கை எங்கே செல்கிறது' என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், தமிழரைப் பொறுத்தவரை, நாட்டில் தமிழர் பெரும்பான்மையினராக வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழ்ப் பிராந்தியங்கள் என ஏற்றுக் கொள்ளப்படவேண்டும். அத்துடன் அரசு உதவியுடனான குடியேற்றத் திட்டங்கள்மூலம் பிரதேசங்களின் இனவிகிதாசாரத்தை மாற்றக்கூடாது

''தமிழர் பிரச்னை அண்மைக்காலத்தில் ஆரம்பமானதல்ல. 44ம்ஆண்டில் சிங்களம் மட்டும் உத்தியோக பூர்வ மொழியாக்கப்பட வேண்டும் என திரு. ஜவர்த்தன அரச சபையில் பிரேரணை கொண்டு வந்தவுடன் ஆரம்பமாகியது'' என்றுகூறினார். [ய.செ.]

## ஹெலி தாக்குதலுக்கு பலியான மாணவனுக்கு மக்கள் அஞ்சலி

பச்சிலைப்பள்ளி, செவ்

வவனியா மாவட்டத்திலுள்ள பெரியதம்பனையில் கடந்த வியாழக்கிழமை ஹெலிகொப்டர் சுட்டதில் மரணமடைந்த பத்து வயது மாணவன் பொன்னுச்சாமி விஜயகுமாரின் பூதவுடல் பெரியதம்பனை சனசமூக நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அன்று மாலை அடக்கம் செய்வதற்காக எடுத்துச் செல்லப் பட்டது.

ஹெலிகொப்டர் தாக்குதலினால் மரணமடைந்த மாணவனின் வீடும் முற்றுகைச்சேதமடைந்ததினாலேயே, சனசமூக நிலையத்தில் அஞ்சலிக் காகச்சடலம் வைக்கப்பட்டது.

## ''தமிழ் காமராஜ்'' கப்பல்

சென்னை, ஜூலை-15

தமிழகஅரசு யப்பானிலிருந்து வாங்கவுள்ள 3வது கப்லுக்கு மறைந்த பெருந் தலைவர் காமராஜரின் நினைவாக ''தமிழ் காமராஜ்'' என்று பெயர் சூட்டவுள்ளதாக அறிவித்துள்ளது.

அமரர் திரு. காமராஜரின் 84வது பிறந்த தினத்தை யொட்டியே நேற்று தமிழக அரசு இந்நடவடிக்கையினை மேற்கொண்டது

மாநில அரசின் பூம்புகார் போக்குவரத்துக் கழகம் வாங்கும் இக்கப்பல் எதிர்வரும் அக்டோபர் மாதம் தமிழகம் வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகிறது. [சிவ]

## பிரிட்டிஷ் எதிர்க்கட்சித் தலைவர் கருத்து

லண்டன், ஜூலை-15

இலங்கையின் இனப்பிரச்னையைத் தீர்க்க அதிகாரங்களைப் பரவலாக்க இலங்கை அரசு தீர்மானித்திருப்பது தனக்குத் திருப்தி தருவதாகப் பிரிட்டிஷ் எதிர்க்கட்சித் தலைவர் திரு நீல் ஜின்னெக் இலங்கைவெளியுறவு அமைச்சர் ஜனாப் ஹமீத்திடம் தெரிவித்துள்ளார்

இவர்கள் இருவரும் பிரிட்டிஷ் பொதுச் சபையில் சந்தித்தபோதே திரு தின்னெக் இதனைக் கூறியுள்ளார்.

இனப்பிரச்னைக்கு ஒருதீர்வு காணப்படுமெனத் தாம் நம்பிக்கையுடன் இருப்பதாகவும் திரு ஜின்னெக் ஜனாப் ஹமீத்திடம் தெரிவித்துள்ளார். [செ]

# வல்வை, மன்னர், மூதூரில் இராணுவம் - புலிகள் சமர்

யாழ்ப்பாணம், புதன்

வல்வெட்டித்துறை இராணுவ முகாமிலிருந்து நூற்றுக்குமதிகமான இராணுவத்தினர் நடைபவனியாக வெளிவந்த சமயம் 'தமிழீழ விடுதலைப் புலிகள்' இயக்கபோராளிகள் கடுமையான தாக்குதல் மேற்கொண்டபொழுது இருதரப்பினருக்குமிடையே கடும் சமர் ஏற்பட்டது.

இச்சமரில் இராணுவத்தினர் தரப்பில் பலர் கொல்லப்பட்டும் காயமடைந்துமுள்ளதாகவும் தமது தரப்பில் எதுவித சேதமுமேற்படவில்லை என்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

நேற்றுமுன்தினம் காலை இருதரப்பினரிடையேயும்இக்கடும் சமர் இடம் பெற்றது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''வல்வை இராணுவமுகாமிலிருந்து நூற்றுக்கதிகமான இராணுவத்தினர் நேற்றுக் காலை 6மணியளவில் முகாமைவிட்டு நடைபவனியாக வந்த சமயம் எம்மவர்கள் கடும்தாக்குதலை மேற்கொண்டனர்.

''இத்தாக்குதலின்போது இராணுவத்துக்கு உதவியாக ஹெலிகொப்டர் ஒன்றும்வந்து தாக்குதலில் ஈடுபட்டது இவற்றின் மத்தியிலும் எம்மவர்கள் கடுமையான எதிர்த்தாக்குதலை மேற்கொண்டதில் இராணுவதரப்பில் பல உயிரிழப்புகளும், காயங்களும் ஏற்பட்டன.

''இறந்தவர்களையும், காயப்பட்டவர்களையும் முகாமுக்கு எடுத்துச்செல்ல ஹெலிகொப்டர் தரையிறங்கிய சமயம் எம்மவர்களின் கடுமையான எதிர்த்தாக்குதல்களால் ஒரு சிலரை மட்டுமே ஹெலிகொப்டர் ஏற்றிச் சென்றது.

இச்சமரானது 7 மணிநேரம் இடம் பெற்றது. இறுதியில் இராணுவத்தினர் தமது இழப்புகளுடன் முகாம் திரும்பினர்.

இச்சம்பவத்தின்போது வயோதிபர் ஒருவர் அவ்வழியாக வந்தபோது அவரைமுகாமாகில் இழுத்துச்சென்றுவாய் வழியாக சுட்டுக்கொன்றனர். பின் எம்மவர்கள் இராணுவத்தினரின் துப்பாக்கிச்சூடுகளின் மத்தியில் அவரது உடலை மீட்டெடுத்து உரியவர்களிடம் ஒப்படைத்தனர்.

முகாம் திரும்பிய இராணுவத்தினர் ஆட்லறி. மோட்டார் ஷெல் தாக்குதல்களை தொடர்ந்து மேற்கொண்டனர்'.

''நேற்று முன் தினம் காலை 6 மணியளவில் மாந்தை சந்திக்கு 200க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் வந்து நடத்திய தாக்குதலின்போது தம்மால் கைவிடப்பட்ட பொருள்களை தேடிக் கொண்டிருக்கையில் எம்மவர்கள் திடீரென மேற்கொண்ட தாக்குதலில் இராணுவதரப்பில் உயிரிழப்புகளும், காயங்களும் ஏற்பட்டன. எமது தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவத்தினர் மீண்டும் முகாம் திரும்பினர்.

நேற்றுமுன்தினம் இடம் பெற்ற சம்பவத்தின் போது இராணுவத்தால் கைவிட்டுச் சென்ற ஏ கே ரக ரைபிள் ரவைகள் 150க்கும் மேல் எம்மால் கைப்பற்றப்பட்டன. மேலும் சிதறிய நிலையில் இராணுவத்தினரின் கவசதொப்பிகளும்,ரவைக்கூடுகளும்காணப்பட்டன.

''மூதூர் மாவட்டத்தில் கட்டைபறிச்சான் இராணுவ முகாமிலிருந்து நேற்றுமுன் தினம் காலை 9மணியளவில் 50க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் நடைபவனியாக முகாமிலிருந்து 500 யார் அளவில் வந்தபோது எம்மவர்கள் இராணுவத்தினர் மேல்தாக்குதலை மேற்கொண்டதில் இராணுவத்தினர் பல உயிரிழப்புகளுக்கும், காயங்களுக்குமுள்ளானார்கள். மேலும் முன்னேக்கிவரமுடியாத இராணுவத்தினர் தமது இழப்புகளுடன் முகாம் திரும்பினர். இத்தாக்குதல் சம்பவத்தின போது எமது தரப்பில் எதுவித இழப்புகளும் ஏற்படவில்லை.'' (மா)

## கிளிநொச்சியில் மோதல்

வவனியா, செவ்.

கிளிநொச்சியில் நேற்றுமுன் தினம் தமிழ்ப் போராளிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையே பலத்த மோதல் இடம்பெற்றது.

கிளிநொச்சி 4ம், 5ம் வாய்க்கால் பகுதிகளுக்கு இராணுவத்தினர் கவசவாகன சகிதம் சென்றதாகவும். போராளிகள் இவர்களை எதிர்கொண்டு தாக்கியதாகவும் தெரிய வருகின்றது.

ஆனால் இம்மோதலில் இருபகுதியினரிடையிலும் ஏற்பட்ட சேத விபரங்கள்பற்றி அறியமுடியவில்லை

## ஆடியபாதம் வீதி பெயர் மாற்றம் அவசியமற்றது

யாழ்ப்பாணம் புதன்

நல்லூர் சந்தியின் கிழக்குப் புறமாக அமைந்த ஆடியபாதம் என்றபெயருடைய வீதியின் பெயரை மாற்றுவது அவசியமற்றதென திருநெல்வேலி பிரஜைகள் குழு தீர்மானம் செய்துள்ளதாக மேற்படி பிரஜைகள் குழுத் தலைவர் திரு க. இராசசுந்தரம் அறிக்கையொன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

'ஆடியபாதம் வீதி' என்ற பெயரை யாழ். அபிவிருத்திச் சபையின் கொக்குவில்நல்லூர் உபபணிமனைகளின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒன்று சேர்ந்து கடந்தமாதம் 15ந்திகதி வெளியிடப்பட்ட முக்கிய அறிவித்தல் தொடர்பாகவே திருநெல்வேலி பிரஜைகள் குழுத்தலைவர் மேற்கண்ட அறிக்கையை விடுத்துள்ளார்.

ஆடியபாதம்வீதி என்ற பெயர் பலநூறுவருடங்களாக இருந்துவருகிறதென்றும் இவ்வீதி எல்லையாகக் குறிப்பிட்டு பல ஆயிரக்கணக்கான காணியுறுதிகள் இருந்துவருகின்றதென்றும் இப்பெயர் சமய அடிப்படையில் ஒரு புனிதமான நற்பெயராக அமைந்திருக்கிறதென்றும் ஆகவே ஆடியபாதம் வீதி என்றபெயர் மாற்றப்படுவது அவசியமற்றதென்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ]

## தென் ஆபிரிக்காவில் நெருக்கடி நீடிப்பதை எதிர்த்துப் பகிஷ்கரிப்பு

பிரிட்டோரியா, யூலை 15

தென் ஆபிரிக்காவில் தொடரும் நெருக்கடி நிலைகளிற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் பாடசாலைப்பருவம் ஆரம்பிக்கும் முதல்நாளான நேற்று முன்தினம் ஆயிரத்துக்கும் அதிகமான பாடசாலை மாணவர்கள் பாடசாலைகளை பகிஷ்கரித்தனர்.

வெள்ளையரல்லாதோர் வசிக்கும் பல நகரங்களில் உள்ள மாணவர்களே இவ்வாறான பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். எனினும் 80 சதவீதமான மாணவர்கள்பாடசாலைகளுக்கு சமூகமளித்தனரென அரசு வட்டாரங்கள தெரிவித்தன.

இதற்கிடையே தொழிற்சங்கத்தலைவர்கள் பலர் கைதானதை எதிர்த்து நடைபெற்ற பல்வேறு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் பல தொழிலாளர்கள் கலந்து கொண்டனர் இவற்றால் கிழக்கு கேப்பில் ஜெனரல் மோட்டார் நிறுவனம் முற்றாக மூடப்படவேண்டிய நிலை ஏற்பட்டது. (சிவ)

## யாழ். வர்த்தக சங்கப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

திரு. எஸ். வி. முருகேசுவின் ஸ்தாபனத்திற்கு லொறியில் கொண்டு வந்த பொருள்கள் சூறையாடப்பட்டதைக் கண்டித்து வேறுபோக்குவரத்துச் சேவையாளருக்கு நடைபெற்ற சம்பவங்களுக்காகவும், மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆலோசிப்பதற்காகவும், யாழ் வர்த்தக சங்கப் பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும் 19ம் தேதி சனிக்கிழமை பிற்பகல் யாழ் பாரதி பாஷா வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது.

### மணிவாக்கு

சந்தேகக்கண்கொண்டு கலாசாரத்தை நோக்காது விடுவதே கலாசார ஆய்வாளனின் முதலாவது தகைமையாகும். — சாமுவேல் பட்டல்.

## நமது நோக்கு

# வாகன உரிமையாளர் போராட்டம்

பலாலி இராணுவ முகாமுக்குச் சென்று அனுமதிப் பத்திரம் பெற்றிருந்தால் மட்டுமே கொழும்பு செல்வதற்கு வாகனங்கள் அனுமதிக்கப்படும் என்ற நடைமுறை சிறிதும்திருப்தியளிப்பதாய் இல்லை.

இங்கிருந்து கொழும்பு செல்லும் வாகனங்களில் ஆட்சேபகரமான பொருள்கள் எடுத்துச்செல்லப்படலாம் என்று அதிகாரிகள் கருதுவது சிலவேளை சரியாய் இருக்கலாம். ஆனால் அந்தவிதமான சந்தேகங்களைப் போக்கிக்கொள்வதற்காகத்தான் ஆனையிறவு முதல் கொழும்பு நகருக்குள் நுழையும்வரையில் ராணுவமுகாம்களிலும் பொலிஸ்நிலையங்களிலும் சோதனைகள் நடத்தப்படுகின்றனவே! இவை போதாதென்று இடைநடுவில் தற்செயலாக எதிர்கொள்ளும் நடமாடும் ஆயுதப்படையினரும் சோதனைகளை நடத்துகிறார்கள். சந்தேகம் அதிகரிக்கும் வேளைகளில் லொறிகளில் ஏற்றியிருக்கும் பொருள்களை முழுமையாக இறக்கச்செய்தும் சோதனை நடக்கின்றது. இவ்வாறு இறக்கி ஏற்றுவதனால் ஏற்படும் செலவுகள் குறித்து வாகன உரிமையாளர்கள் வாய் திறப்பதில்லை. வாகனங்களில் செல்லும் பிரயாணிகள் சகலரும் இறக்கிவிடப்பட்டு வரிசையாக சோதிக்கப்படுவதுடன் வாகனங்களிலுள்ள அவர்களின்பொருட்களும் கடுமையாக சோதிக்கப்படுகின்றன.

இம்மட்டன்று, எங்கோ ஓர் இடத்தில் வன்செயல் ஒன்று இடம்பெறுமானால் அவ்வழியாக வரும் இந்த வாகனங்களே பாதிப்புள்ளாகின்றன. சிலசமயங்களில் வாகனங்கள் எரிக்கப்படுவது மட்டுமன்றி ஓட்டுநர்கள், சிப்பந்திகள், உரிமையாளரும்கூட வாகனத்துடன் எரிக்கப்பட்டுள்ளார்கள்.

இன்னும் சில வேளைகளில் இலட்சக்கணக்கான பொருள்களுடன் வாகனங்கள்கடத்தப்பட்டு கொள்ளையடிக்கப்படுவதுண்டு.

இவ்வளவு ஆபத்துக்களையும் சகித்துக்கொண்டு வாகன உரிமையாளர்கள் யாழ்ப்பாணம் - கொழும்பு வாகனசேவைகளை நடத்துகிறார்கள் என்றால், வெறும் இலாபம் மட்டும் தான் அவர்களின் நோக்கம் என்று கூறுவது பொருந்தாது. நெருக்கடி மிக்க இந்தக் காலத்தில் அவர்களின் பணி இப்பகுதி மக்களுக்கு மிகவும் தேவைப்படுகின்றது.

இங்கேவ்லையும் பொருள்களை கொழும்புக்குக் கொண்டுசெல்வதும் அங்கிருந்து இங்கே தேவையான பொருள்களைக்கொண்டுவருவதும் மட்டுமின்றி அவசியமாக தலைநகருக்குப்போய்த் திரும்பவேண்டிய பொது மக்களை ஏற்றி இறக்குவதும் அவர்களின் பணியாகவுள்ளது.

இந்தப்பணிகளை கடந்த 11ம் திகதி முதல் வாகன உரிமையாளர்கள் நிறுத்தி வைத்திருக்கிறார்கள் இன்று வடபிராந்திய லொறிப் போக்குவரத்துச் சங்கமும், முஸ்லிம் போக்குவரத்து ஒன்றியமும் இணைந்து வட பகுதியில் பூரண ஹர்த்தால் ஒன்றையும நடத்துகிறார்கள்.

பலாலி முகாமுக்குச் சென்று அனுமதிப்பத்திரம் பெறவேண்டும் என்றநடைமுறை கைவிடப்படும்வரை பலாக்கப்பால் தமது வாகனங்களை செலுத்துவதில்லையென்றும், அங்கிருந்துவரும் வாகனங்களையும் திரும்பிச் செல்லவிடுவதில்லை யென்றும் இவர்கள் தீர்மானித்துள்ளனர்.

சமீபகாலம் வரையில் கொழும்பு செல்லும் வாகனங்கள் இராணுவமுகாமில் அனுமதிப்பத்திரம் பெறவேண்டும் என்ற கட்டுப்பாடு இருக்கவில்லை. அண்மையில் கொழும்பில்நடந்த சில சம்பவங்களையடுத்து இப்படியான முட்டுக்கட்டைகளை அதிகாரிகள் ஏற்படுத்தியுள்ளார்கள். இந்த ஏற்பாடு எந்தவகையில் அந்தச்சம்பவங்களைக் கட்டுப்படுத்தும் என்று எமக்கு விளங்கவில்லை. ஆனால் ஏற்கனவே அசாதாரண நிலைமைக்குள்ளாக்கப்பட்டுள்ள பொதுமக்களே பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்.

இராணுவமுகாம்களை ஏறெடுத்துப்பார்க்கவே பொதுமக்கள் அஞ்சிக்கொண்டிருக்கும் வேளையில் அனுமதிப்பத்திரம் வாங்குவதற்கு அங்கு வரவேண்டும் என்று பணிப்பது சரியல்ல.

வாகன உரிமையாளர்கள் கொழும்புக்குத் தமது வாகனங்களை எடுத்துச் செல்வதற்கு அவசியம் அனுமதிப்பத்திரம் பெற்றுத்தான் ஆகவேண்டும் என்று கருதப்படுமானால், அதனை அரசாங்க அதிபர் காரியாலயங்கள் மூலம் செயல்படுத்துவதே முறை.

அதுவும் கூட அவசியமில்லையென்றே தோன்றுகின்றது

## லட்சார்ச்சனை பூர்த்தி விழா

யாழ்ப்பாணம், புதன்

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த லட்சார்ச்சனை சண்டிகாஹோமம் இம்மாதம் 21ந் திகதி திங்கட்கிழமை பௌர்ணமி தினத்தன்று நிறைவுபெறவுள்ளது. இவ்வர்ச்சனை கடந்த 11ம் திகதி ஆரம்பமானது.


## பலாலிக்கு 4 பொம்பர்கள் வந்தன

யாழ்ப்பாணம், புதன்

நேற்று பலாலி விமான நிலையத்திற்கு நான்கு பொம்பர் விமானங்கள் வந்து சேர்ந்துள்ளதாகத் தெரியவருகிறது.

இவற்றில் இரண்டு விமானங்கள் அதி நவீன மானவை என்றும் இரண்டு பழைய அமைப்பைச் சேர்ந்தவை என்றும் தெரிகிறது. (ஐ)

# ஊர்காவற்றுறை ஊரடங்குதுறையானது



பண்ணையால் ஊர்காவற்றுறை போன கதைகள் பழங்கதையாகப் போய்விட்டன.

போனவர் வந்திலர், வந்தவர் போயிலர் என்ற அளவுக்கு இப்பாதையைப் பாவித்தவர்கள் அவலம் அடைகின்றனர்.

நாமும் எப்படி எப்படியோ சுற்றிப் போய் ஊர்காவற்றுறையை அடைந்து விட்டோம்!

ஊர்காவற்றுறைத் தொகுதியில் நாம் பேட்டி கண்ட மீனவர்கள் ''எமது உரிமைப் போராட்டம் உயிர்வாழும் போராட்டமாக நசுக்கப்படுவதற்கு கடல் வலயச் சட்டமே முன்னோடிஎன எடுத்துரைத்தனர். தென்னாபிரிக்காவில் கூட கறுப்பருக்கும், வெள்ளையருக்கும் சம்பள விடயத்தில் பாகுபாடே அன்றித் தொழில் செய்யக் கூடாது எனக் கட்டுப்பாடு இல்லை என்றார் இன்னொரு படித்த வாலிபர். சிந்திக்கவேண்டிய ஒன்று தான்.

ஊர்காவற்றுறை பாராளுமன்றத் தொகுதியில் மூன்று அரசாங்க அதிபர் பிரிவுகளாக ஊர்காவற்றுறை. வேலணை, நெடுந்தீவு என்பன அமையும். இம்மூன்று பிரிவுகளிலும் அனலைதீவு, எழுவைதீவு. காரைநகர் மேற்கு காரைநகர்கிழக்கு. காரைநகர் வடக்கு, கரம்பன், நாரந்தனை, சுருவில் என்றபகுதிகளும் அடங்கும். இவ்விடங்களில் உள்ள பத்தாயிரம் மீன்பிடி மக்கள் தொழிலின்றி வாடுகின்றார்கள்.

உங்கள் வாழ்க்கை எப்படிக் கழிகின்றது என ஒரு மீனவரைக் கேட்டேன். மீன் மீன்கொத்தியின் வாழ்க்கை என்றார்.

என்னப்பா புதிர் விடுகின்றாய் என்றேன்

இல்லை...... மீன்கொத்தி அடைகாக்கும் போது ஆணும்

| களஆய்வு |

● திக்கவயல் சி. தர்மகுலசிங்கம்

பெண்ணுமாகக் கூட்டில் இருக்கும் நாமும் கடல் வலயத்தால் தொழில் இழந்து விட்டோம். இப்போது எமது குழந்தைகளைக் காப்பாற்றக் காலையில் எழும்பி நாம் இருவருமே வேலைக்குச் செல்கின்றோம்.

''கத்துகடல் சூழ் காத்தானின் சத்திரத்தில அத்தமிக்கும் போது அரிசி வரும்'' என்ற கதைதான் எமக்கும் எனச் சிரித்தார்.

கடல் வலயத்தில் 3 மைல் மீன்பிடிக்கச் சட்டம் இருக்கின்றதே எனக்கேட்டு வைத்தேன். சட்டம் அப்படியிருக்கலாம் ஆனால் கடலில் இறங்கவே முடியாது, பாதுகாப்பு வலயம் எம்மைதரையிலேயே 3 மைல்களுக்கு மேல் தள்ளியுள்ளது. ஆறுமுகம் கடையென ஊர்காவற்றுறையில் ஒரு கடை இருக்கிறது அந்த மூலையால் கொஞ்சத்தூரம் போனால் கடல்வரும் போய் நடந்துவருவீரா? எனக்குச் சவால்விடும் பாணியில் அவர் கேட்டுவைத்தார்.

உங்களுக்குச் சட்டம் பாதுகாப்புத் தருகிறது ஆனையால் கடற்படை முகாமுடன் தொடர்பு கொண்டு தொழில் செய்வதில் உள்ள நீதியை விளங்கப்படுத்த முடியாதா? பிரஜைகள் குழு என ஒரு அமைப்பு இருக்கிறதே எனக்கேட்டேன்

பிரஜைகள் குழுவுக்கு என்ன பாதுகாப்பு பூனைக்கு மணிகட்டுவது யார்? யமனுக்குரிய உரிமைகள் இன்று பாதுகாப்புப் படைகளிடம் இருக்கின்றன. அவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு எவராலும் முடியாது அதை நம்பிக் கடலில் இறக்க நாம் தயாரில்லை என்றார்.

ஊர்காவற்றுறையில் எந்தெந்த மீன் பிடிக்கிராமங்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன எனக்கேட்டேன். பருத்தியடைப்பு, அனலைதீவு. எழுவைதீவு. மெலிஞ்சிமுனை, கெட்டில்துறை, வெள்ளக் கடற்கரை, நயினாதீவு. புளியந்தீவு, புங்குடுதீவு, இறுப்பிட்டி என நீட்டிக்கொண்டே போனார். அந்த மீனவர் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்திய இச்சட்டம் இக்கிராமங்களைக் வறுமைப் பிடிக்குள் அமிழ்த்திவிட்டது.

### நெடுந்தீவு மக்களுக்கு கறுப்புக்கொடி

அமெரிக்காவின் தென் கோடியில் உள்ள டிரா—டெல்—பியூகோ என்ற இடத்தைப்பற்றி லோட்பிரபு பின்வருமாறு எழுதினார்.

''இதைக்காட்டிலும் பயங்கரமான கடற்கரை உலகில் வேறு எதுவும் இல்லை. அமைதியான இரவுநேரத்தின்போது அலைகளின் உறுமல் உள்நாட்டில் இருபது மைல்கள் கேட்கும். தொடர்ந்து இருவாரம் கனவு காணவேண்டுமானால் இக்கடற்கரைக்குப் போனால் காணும்'' என எழுதினார்.

குமுதினிப் படகுப் படுகொலைகட்குப் பின்பு நெடுந்தீவுக்கடலும் மேலே சொன்ன உதாரணத்தில்தான் நிற்கின்றது. கடல் வலயத்தினால் மிகப்பெரும் பாதிப்பு நெடுந்தீவில் உண்டு எனக் குறிக்கட்டுவான்துறையில் மீனவர் ஒருவர் விளக்கினார்.

மாணிக்கவாசகர் காலத்தில் குதிரையை நரியாக்கிய கதைகள் நடந்தன. இப்போது நெடுந்தீவு குதிரைகளில் சிலவற்றை நயினாதீவு இராணுவத்துக்கு ஒப்படைத்தால்

தான் உயிர்வாழும் உரிமை குமுதினிப் படகுப் பிரயாணிகட்கு உண்டு. இந்நிலையில் மீன்பிடிக்கப் போகமுடியுமா என்கின்றார் அவர்.

நாலுபக்கமும் கடல்சூழ்ந்த நெடுந்தீவு, மூன்று பக்கமும் கடல்சூழ்ந்த யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் இருந்து சூடைக் கருவாடு சுமந்துவருகின்றது.

நடுக்கடலில் இருக்கும் பாதுகாப்புப் படையினரால் தொழிலால் நூறுவீதம் பாதிக்கப்பட்ட நெடுந்தீவு மக்கள் 3000க்கு மேல்! யாரிடம் சொல்லி அழுவோம் என்ற நிலையில் பரிதவிக்கின்றார்கள். இந்தநிலையேநயினாதீவிலும்மற்றைய தீவுக் கூட்டங்களிலும் நிலவுகின்றது.

கடல்வலயச் சட்டம் யாழ். குடாநாட்டை வறுமைக் கோட்டில் தள்ளியுள்ளது. ஆய்வுகளிலிருந்து நாம் தெரிந்து கொண்ட மிகப்பெரும் உண்மை இது.

## மக்கள் கருத்து

### ஈழத்து நாடோடிக் கதைகளும் தொழில் நிலைப் பாடல்களும்

எமது கிராமங்கள் தோறும், முன்னோர் காலந்தொட்டு, பரம்பரை பரம்பரையாக வாய் வழி வாயாகப் பல்வேறு கிராமியக் கதைகளும் தொழிலாளர் பாடல்களும் வழங்கி வருவது நாம் அறிந்தவையே.

இவை எமது சமூகப் பொருளாதார வரலாற்றுப் பின்னணியை அறிவதற்கு உதவுவனவாகும். இவற்றினை எழுத்து வடிவில் அமைப்பதற்கு எமது நிறுவனத்தினர் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறன கதைகளையும், உழைப்போர் பாடல்களையும் அறிந்தவர்கள் தயவு செய்து அவற்றினை எழுத்து மூலம் எமது அலுவலகத்திற்கு அனுப்பும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

இம் முக்கிய விடயத்திற்கு சகலரும் உதவுவார்கள் என எதிர்பார்க்கின்றோம். இது சம்பந்தமாக விபரங்கள் யாதேனும் தேவைப்படின் தயவு செய்து எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

ஆய்வு நிறுவனம்
81/1 கே. கே. எஸ், வீதி
கொக்குவில்.

## 'ஈழத்துப் புனைகதைகளில் பேச்சுவழக்கு'

யாழ்ப்பாணம் புதன்

'ஈழத்துப் புனைகதைகளிற் பேச்சுவழக்கு, என்னும் நூல் வெளியீட்டுவிழா பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் 19ந் திகதி சனிக்கிழமை காலை நல்லை ஆதீனத்தில் நடைபெறும்.

இந்நூலின் ஆய்வுரைகளைப் பேராசிரியர் கா. சிவத்தம்பி' கலாநிதி திருமதி பார்வதி கந்தசாமி, ஈழத்துச் சோமு ஆகியோர் நிகழ்த்துவார்கள்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு வித்தியானந்தன் வாழ்த்துரை வழங்குவார்.

கலாநிதி சி. மௌனகுரு நன்றிதெரிவித்துப் பேசுவார்.

திரு சி வன்னியகுலம் எழுதிய இந்நூலை 'முத்தமிழ் வெளியீட்டுக் கழகம்' வெளியிட்டுள்ளது. (ஐ)

## ஆங்கில தினவிழா

வவனியா செவ்வாய்

வவனியா பூவரசங்குளம் மகா வித்தியாலய ஆங்கிலதின விழா அண்மையில் வட்டாரக் கல்வியதிகாரி திருமதி ரி. ஜெயபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

# அநாதைகளுக்கு உதவ வேண்டுகோள்

யாழ்ப்பாணம், புதன்

இன்னல்களுக்குள்ளாகியுள்ள சைவசமயிகள், சைவ சமய அநாதைப் பிள்ளைகள், மற்றும் அநாதைகளுக்கு அகதி முகாம்கள் ஆதரவு கொடுக்காத பட்சத்தில் சைவ அநாதை இல்லங்கள் அபயம் கொடுப்பதற்கும் மற்றும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் முன்வர வேண்டும் என இலங்கையிலுள்ள இந்துக் கோயில்களினதும் தாபனங்களினதும் பாதுகாப்புக்கான அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இத்தகைய அநாதைகள் பற்றிய விபரங்களைத் தொண்டர் ஸ்தாபனங்கள் மேற்படி அமைப்புக்குத் தெரிவிக்கும்படியும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பரீட்சை பாதுகாப்பு குழு அமைக்க கோரிக்கை

அச்சுவேலி, புதன்

அடுத்தமாதம் நடைபெறவிருக்கும் கல்விப் பொதுத் தராதர [உயர்தர] பரீட்சைக்குப் பாதுகாப்புக்குழுக்களை நியமிக்குமாறு யாழ் கல்விப்பணிப்பாளர் பரீட்சைநிலையங்களாக விருக்கும் பாடசாலைகளின் அதிபர்களை வேண்டியுள்ளார்.

பாடசாலை அபிவிருத்திச் சபை, பெற்றோர். பழைய மாணவர் ஆகியோரைக் கொண்ட ஐந்து அங்கத்தவர்களுக்குக் குறையாத பாதுகாப்புக் குழுக்களை நியமிக்கும்படியும் அவ்விபரங்களைத் திணைக்களத்திற்கு அறிவிக்கும்படியும் கல்விப்பணிப்பாளர் கடிதமூலம் அதிபர்களைப்பணித்துள்ளார்.

## பருத்தித்துறையில் இராணுவம் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், புதன்

பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினரை, தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகள் எதிர்கொண்டு கடுமையாகத் தாக்கியதால் உயிர்ச் சேதங்களுடன் இராணுவம் மீண்டும் முகாம் திரும்பியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக 'தமிழீழவிடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

''பருத்தித்துறை ராணுவ முகாமில் இருந்து நேற்றுக் காலை 11-00 மணியளவில் தேடுதல் நடத்துவதற்காக 100க்கு மேற்பட்ட ராணுவத்தினர் கால்நடையாக வி.எம். வீதிவழியே வர முயன்ற சமயம் கடுமையான எதிர்த்தாக்குதல் நிகழ்த்தியதில் ராணுவத்தினர் நிலைகுலைந்தனர்

இரண்டரை மணிநேர எமது உக்கிர தாக்குதல்களின் பின்பு நிலைகொள்ள இயலாத ராணுவத்தினர் தமது இழப்புகளுடன் மீண்டும் முகாம் திருமபினர்.

இத்தாக்குதலின் போது எமது தரப்பில் எதுவிதமான இழப்புகளும் இல்லை. [மா]

## இலவச தட்டெழுத்து வகுப்பு

புலோலி, செவ்

இலவச தமிழ் தட்டெழுத்துப் பயிற்சி வகுப்பொன்றை வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் அல்வாய் தெற்கு மகளிர் கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் இம்மாதம் 19ம் திகதி ஆரம்பிக்கின்றது.

கழக அங்கத்தவர்களில் 10 இளம் பெண்கள் இதில் பயிற்சி பெறத்தெரிவு பெற்றுள்ளனர்.

கழகத் தலைவர் திரு வி. சிவச்சந்திரதேவன் தலைமையில் நடைபெறும் ஆரம்ப விழாவில் உதவி அரச அதிபர் திரு. ஆர் ஐயாத்துரை வகுப்பை ஆரம்பித்துவைப்பார்

## மட்டுவில் கல்வயலில் திருடர் தொல்லை

சாவகச்சேரி, செவ்

மட்டுவில் கல்வயல் பகுதிகளில் திருடர்களின் தொல்லைகள் மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன.

கடந்த திங்கட்கிழமை இரவு கல்வயல் ஐயனர் கோவிலுக்குள் புகுந்த திருடர்கள் அங்கிருந்த உண்டியல் பெட்டியை எடுத்துச் சென்றுள்ளனர்.

இதைத்தவிர மட்டுவில் தெற்கு விளைவேலிக் கிராமத்தில் இருக்கின்ற வீடொன்றுக்குள் இரவு நேரத்தில் புகுந்த திருடர்கள் எரிந்துகொண்டிருந்த மின்சார பல்புகளை அணைத்துவிட்டு அங்கிருந்த இளம்பெண் பிள்ளையின் கையிலிருந்த காப்பினை அபகரித்த சம்பவமும் நடைபெற்றுள்ளது


**லிடோ**

காலை 10-30, 2-30, 6-30

பாக்கியராஜ் சரிதா நடித்த

**மௌனகீதங்கள்**

(கலர் - புதிய பிரதி)

**வெலிங்டன்**

10-30, 2-30. 4-30. 6-30 P-M

முதல் முறையாக யாழ் நகரில் காண்பிக்கப்படுகிறது.

**VENOM**

Action - Thrill


## ஹெலிதாக்கி லொறிவண்டி சேதம்

ஊர்காவற்றுறை, செவ்வாய்

ஊர்காவற்றுறையில் பொருட்கள் ஏற்றிசென்ற பிலிப்பையா என்பவருடைய லொறிவண்டி, ஹெலிக்காப்டரிலிருந்து சுட்டதினால் பலத்த சேதக்குக்குட்பட்டது. முன் கண்ணாடிகள், ரயர்கள் போன்ற லொறியின் கின் பலகாகங்களை துப்பாக்கிரவைகள் துளைத்திருந்தன. இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை ஊர்காவற்றுறை சந்தைக்கண்மையில் நடந்தது.

## பாடசாலை இடமாற்றம்

புலோலி, செவ்

பருத்தித்துறை சென் தோமஸ் கன்னியர் மடம் மீண்டும் பருத்தித்துறைஇராணுவத்தினரின் மோட்டார் ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி சேதப்படுத்தப்பட்டுள்ளதைத் தொடர்ந்துஇங்கிருந்த பரிசுத்த கன்னியாஸ்திரிகள் தனியார் வீடொன்றிற்கு இடம் பெயர்ந்துள்ளனர் இங்கு இயங்கிவந்த பாடசாலை கலட்டி றோமன்கத்தோலிக்க பாடசாலைக் கட்டிடத்தில் இயங்கிவருகின்றது.

## 'பொலிடோல்' போத்தல்கள் புதைக்கப்பட்டன

பண்டத்தரிப்பு, செவ்

பண்டத்தரிப்புப் பகுதியிலுள்ள தனியார் கிருமிநாசினி விற்பனை நிலையம் ஒன்றில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பாவனைக்கு உதவாத பொலிடோல் விவசாயத்திணைக்கள அதிகாரியின் உத்தரவின் பேரில் நிலத்தில் வெட்டிப் புதைக்கப்பட்டது. விவசாயிகள் தங்கள் பயிர்களுக்கு இக்கிருமிநாசினியைஉபயோகிப்பது கடந்த 1983-ம் ஆண்டிலிருந்து தடைசெய்யப்பட்டுள்ளது என்றும் 1983ம் ஆண்டிற்குப் பின்பு இதன் இறக்குமதி எதுவும் நடைபெறவில்லை என்றும் தற்போது கடைகளிலும் விற்பனை நிலையங்களிலும் பொலிடோல் விற்கப்படுமானால் அது சக்தியற்றதாகவே இருக்குமென்று யாழ் விவசாயதிணைக்கள தலைமைக்காரியாலய விவசாய உத்தியோகத்தர் திரு. ரகுபதி தெரிவித்தார்.

## இ. தொ. க---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கப்பட்ட உத்தேசமாகாணசபை யோசனைகள் தொடர்பாக அம்மகாநாட்டில்பங்குகொண்ட கட்சிகள் தெரிவித்த கருத்துக்கள் நேற்றைய மகாநாட்டில் வெளியிடப்பட்டன. அப்போதே பெரும்பாலான கட்சிகள் மகாண இணைப்பை ஏற்காததையும் மாகாண எல்லைகளில் மாற்றம் கொண்டுவரப்படுவதை நிராகரித்ததையும் ஜனதிபதி நேற்றுத் தெரிவித்தார்.

நேற்றைய மகாநாட்டில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி மட்டும் வடக்கு-கிழக்கு இணைந்த மாநில சுயாட்சியை வலியுறுத்தியதுடன் இரு மாகாணங்கள் இணைக்கப்படுவதை ஏற்றுக்கொண்டது.

இ. தொ. க. உட்பட அனைத்து ஏழுகட்சிகளும் மாகாண இணைப்பை எதிர்த்தன.

நேற்றைய மகாநாட்டில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி, ஐ. தே. க. ஆகிய கட்சிகள் கலந்துகொண்டன. இன்று பிற்பகல் மீண்டும் அரசியல் கட்சி மாநாடு இருமணி நேரம் இடம்பெறும் இம்மகாநாடு 18ந் திகதி வரை தொடரும். [வா]

## மாகாணசபை---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாக இருப்பார்.

மாகாண சபைகள் பற்றிய குழுவுக்கு அமைச்சர் ஏ ஸி எஸ் ஹமீத் பொறுப்பாக இருப்பார்.

காணி, காணி குடியேற்றம் பற்றிய குழுவுக்கு அமைச்சர் காமினி திஸநாயக்கா தலைமை தாங்குவார்.

சட்டம், ஒழுங்கு சம்பந்தமான குழுவுக்கு அமைச்சர் லலித் அத்துலத்முதலி தலைமை தாங்குவார்.

இவ் ஐந்து குழுக்களைத்தவிர எதிர்க்கட்சியிலிருந்து தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு உறுப்பினர்களைக் கொண்ட இணைப்புக் குழுவொன்றும் அமைக்கப்படவுள்ளது. இவ் இணைப்புக்குழுவுக்கு ஜனதிபதி ஜயவர்த்தன தலைமை தாங்குவார்.

ஐந்து குழுக்களின் சிபார்சு அறிக்கைகள் 18ம் திகதி கூடவிருக்கும் அரசியல்கட்சி மகாநாட்டில்முழு அளவில்பரிசீலனை செய்யப்பட்டு இறுதியான தீர்மானம் எடுக்கப்படவுள்ளது. [வா]

# இளைஞனும் யுவதியும் நஞ்சருந்தி தற்கொலை

யாழ்ப்பாணம், புதன்

ஒரு யுவதியும் இளைஞனும் அடுத்தடுத்து நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்துள்ளனர்

நீர்வேலியில் இப்பரிதாபகரமான சம்பவம் இடம் பெற்றது

வீட்டுவேலை செய்யாமல் வெளியில் திரிந்துவிட்டு வீடு வந்துசேர்ந்த சகோதரியை மூத்த சகோதரர் கண்டித்தாராம். மனமுடைந்திருந்த அவ்விளம் பெண் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

மறு நாள் இவ்விளம் பெண்ணின் வீட்டுக்குப்பக்கத்தில் வசிக்கும் ஒரு இளைஞனும் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்தாராம். (மா)

# றீகன் கடிதம் பகிரங்கம் தூதராலயம் அதிருப்தி

கொழும்பு. செவ்

இலங்கையின் இனப்பிரச்சனையைத் தீர்த்து வைக்க ஜனதிபதி ஜயவர்த்தன எடுத்து வரும் முயற்சிகளுக்கு பாராட்டுத் தெரிவித்து அமெரிக்க அதிபர் றீகன் அனுப்பி வைத்துள்ள கடிதத்தின் விபரம் பகிரங்கப்படுத்தப்பட்டது குறித்து கொழும்பிலுள்ள அமெரிக்கத்தூதராலயம் அதிருப்தி அடைந்துள்ளதாக ராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள்காட்டி 'ஹிந்து' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இக்கடிதம் பகிரங்கப்படுத்த அனுப்பப்படவில்லை யெனவும் கடிதத்தின் விபரம் தகவல் துறையினருக்கு வெளியிடப்பட்டுள்ளதுபற்றிதூதராலயத்துக்கு எதுவும் அறிவிக்கப்படவில்லை யெனவும் தூதராலய அதிகாரிகள் கருதுவதாகவும் 'ஹிந்து' மேலும் தெரிவிக்கிறது. [ய - செ]

## யாழ் பொதுசன 5வது கிளை நூலகம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற பொதுசன நூலகத்தின் கிளை ஒன்று முஸ்லீம் கல்லூரி வீதியில் இன்று பிற்பகல் யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு சீ. வீ. கே. சிவஞானத்தினால் திறந்துவைக்கப்படவுள்ளது.

யாழ். பொதுசன நூலகத்தின் 5வது கிளையான இந்நூலகத்திற்கு முஸ்லீம் பகுதிக்கிளை நூலகம் என்றுபெயர் சூட்டப்பட்டுள்ளது. (வா)

## திருமலை எலிபென்ற் ஹவுஸ் குண்டுவெடிப்பு

யாழ்ப்பாணம், புதன்

திருகோணமலையில் உள்ள 'எலிபென்ற் ஹவுஸ்' கம்பனியின் பானத்தை போத்தலில் அடைக்கும் தொழிற்சாலை நேற்றுமுன்தினமிரவு இனந்தெரியாதவர்களால் குண்டு வைத்து தகர்க்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது

அக்குண்டுவெடிப்பில் யாரும் காயமடையவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. குண்டுவெடிப்பின் சேதம்பற்றி இன்னமும் மதிப்பிடப்படவில்லை. (ஐ)

## வாழைச்சேனை---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யும், உணவுப் பொருள்களையும் றீமகாகிதச் சுருள்களையும் கொள்ளை அடித்து ஆலைக்குச் சொந்தமான 3 ட்ரக்டர்களில் ஏற்றிச் சென்றதாகப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. (மா)

## 3 நிபந்தனைகள்--.

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கூறினர்.

பிரபாகரன், உமாமகேஸ்வரன் ஈ. தே. வி. முன்னணித் தலைவர்களையும் தமது தமிழக விஜயத்தின்போது சந்தித்த திரு. குமாரணதுங்க புதுடில்லியில் கொள்கைக் கமிட்டித் தலைவர் திரு. பார்த்தசாரதி வெளியுறவுச் செயலர் திரு ஏ. பி. வெங்கடேஸ்வரன் இணைச் செயலர்திரு. குல்தீப் ஷஹதேவ் ஆகியோரையும் சந்தித்து இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண்பது குறித்து கலந்துரையாடினர்

இனப்பிரச்னைக்குத் தீர்வு காண்பது சம்பந்தமாக பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள விரும்பும் தமிழ் குழுக்களுடன் தாம் அடுத்தகட்ட பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளதாகவும் திரு. குமாரணதுங்க தெரிவித்துள்ளார்.

## ஜீப்வண்டி கண்ணி வெடியால் சிக்கியது

மட்டக்களப்பு, புதன்

அம்பாறை தாண்டியடியில் நேற்றுக்காலை அதிரடிப்படையினர் சென்றுகொண்டிருந்த ஜீப் வண்டி ஒன்று வீதியில் புதைத்துவைத்திருந்த கண்ணி வெடியில் சிக்கியதால் ஜீப் பலத்த சேதமடைந்ததுடன் அதிலிருந்தவர்கள் பலத்த காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கருக்கோயில் அதிரடிப்படை முகாமிலிருந்து ஜீவ்வண்டியில் சென்றவர்களே கண்ணிவெடியில் சிககியதாகக் கூறப்படுகிறது.

## புதியயோசனைகள்: நாட்டுக்கு பலனில்லை

— ஸ்ரீமாவோ

கொழும்பு, செவ்

இலங்கை அரசின் புதிய யோசனைகள், இலங்கையில் சமஷ்டி அமைப்பொன்றுக்கே வழிவகுக்குமெனவும், இம்முறை அமுல்படுத்தப்பட்டால் அது மத்திய, மாகாண அரசுகளுக்கிடையே ஓயாத சச்சரவுகளையே வளர்த்துக் கொண்டிருக்கப் போவதால் அவசரமான நாட்டுக்கு ஏதும் பலனில்லை என திருமதி பண்டாரநாயக்கா, ஜனதிபதி ஜயவர்த்தனவுக்கு எழுதியுள்ள கடிதமொன்றுல் கூறியுள்ளார்.

அரசின் கட்சிகளில் மாகாநாட்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஏன் பங்குபற்ற வில்லை என்பதற்கு காரணம் காட்டி ஜனதிபதி அக் கட்சிகளினுல் எழுதப்பட்ட கடிதத்தினை திருமதி பண்டாரநாயக்கா இதனைத் தெரிவித்துள்ளார். [ஐ]

## அரசியல்கட்சி---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளர் நாயகம் திரு. யஸ் அபேசிங்காவிடம் கையளித்தது.

அரசியல் கட்சிகளின் மாநாடு பண்டாரநாயக்க சர்வதேச மாநாடு மண்டபத்தில் நேற்று நடைபெற்றபோதே இம்மகஜர் கையளிக்கப்பட்டது. அரசின் புதிய ஆலோசனைகள் பற்றிய தமிழ்க் காங்கிரஸின் கருத்துக்கள் அடங்கிய அறிக்கையுடனேயே இம்மகஜரும் சமர்ப்பிக்கப்பட்டது. [ய-செ]

# மக்கள் மனங்களில் அமைதியை ஏற்படுத்த திருத்தலப் பாதயாத்திரை

சாவகச்சேரி, செவ்.

நாட்டின் இன்றைய சூழ்நிலையில் மக்களின் மனதில் அமைதியையும், ஆனந்தத்தையும் ஏற்படுத்தவும் மக்களிடையே பக்தி உணர்வையும் இளைஞர்களிடையே கோவில் பழக்கத்தினை ஏற்படுத்தவும் நோக்கமாகக்கொண்டு தென்மராட்சிப்பகுதியில் இருக்கின்ற 50க்கு மேலான இந்து சமயத் திருத்தலங்களுக்குப் பாதயாத்திரையை மேற்கொள்ள, சாவகச்சேரி சைவப் பெரியார்களும், சமய அபிமானிகளும் ஏற்பாடுகள்செய்துள்ளனர்.

கடந்த 11ம் திகதி சாவகச்சேரி தெற்கு செருக்கல்பிள்ளையார் கோவிலில் இருந்து இந்த யாத்திரை ஆரம்பமானது திருத்தல பாதயாத்திரையை சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. கே. துரைராஜா ஆரம்பித்துவைத்தார்.

இத் திருத்தலப் பாதயாத்திரை இம்மாதம் 23ம் திகதி புதன்கிழமை காலை, கச்சாய் விதி முருகமூர்த்தி கோவிலில் பூர்த்தியடையும்.

இன்று 16ம் திகதி காலை சங்கத்தானை கந்தசுவாமி கோவில், நண்பகல் மீசாலை மாவடிப்பிள்ளையார் கோவில், மாலை காட்டுவளவுக் கந்தசாமி கோவில், இரவு தட்டான்குளம் பிள்ளையார் கோவில்.

17ம் திகதி காலை வேம்பிராய் பூதவராயர் கோவில், நண்பகல் சேலத்து அம்மன் கோவில், மாலை புளியந்திடல் கந்தசுவாமி கோயில், இரவு ஆலமடம் கந்தசுவாமி கோவில்.

18ம் திகதி காலை ஞானியர் வளவு சந்தசாமி கோவில், நண்பகல் கும்பிட்டான்பிள்ளையார் கோவில், மாலை முதவலடிப்பிள்ளையார் கோவில் இரவு சுட்டிபுரம் அம்மன் கோவில்.

19ம் திகதி காலை மிருசுவில் குருக்கள் மாவடிப்பிள்ளையார் கோவில், நண்பகல் மருதங்குளம் பிள்ளையார் கோவில், மாலை எழுதுமட்டுவாள் விழவளை அம்மன் கோவில், இரவு எழுதுமட்டுவாள் சிவன் கோவில்.

20ம் திகதி காலை உசன் கந்தசுவாமி கோவில், நண்பகல் சம்பாவெளிப் பிள்ளையார் கோவில், மாலை பரமசிவன் கோவில், இரவு ஞான வயிரவர் கோவில்.

21ம் திகதி காலை ஐயன் கோவில், நண்பகல் வேவில், சந்தசாமி, கோவில், மாலை கொடிகாமம் காளிகோவில் இரவு - ஆத்தியடிப்பிள்ளையார் கோவில்.

23ம் திகதி காலை - ஒட்டங்கேணிப் பிள்ளையார்கோவில், நண்பகல் - கச்சாய் அம்மன் கோயில், இரவு - அறுகம்புலம் பிள்ளையார் கோவில்

23ம் திகதி காலை - கச்சாய் விதி முருகமூர்த்தி கோயில்.

# "முதலுதவித் தொண்டு மகத்தான பணி"

பண்டத்தரிப்பு, செவ்.

"முதலுதவிச்சிகிச்சை என்பது விபத்துகள், ஆபத்துகள் வரும்போது காலமறிந்து செய்யும் தன்னலமற்ற சேவையாகும். துன்பங்களும் துயரங்களும் உடல் ஊனமாக்கப்படுதல்களும் அதிகரித்துவரும் இக்காலகட்டத்தில் முதலுதவிப்பயிற்சிபெற்ற தொண்டர்களின் சேவை மகத்தானதாக கருதப்படுகின்றது. இச்சேவையில் இளம்பெண்களிற் பலர் அதிக ஆர்வத்துடன் ஈடுபட முன்வந்திருப்பதை பாராட்டாமல் இருக்கமுடியாது".

இவ்வாறு உடுவில்புதுமடம், சத்தியபுரம், மல்வம் ஆகிய சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படைப்பிரிவின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் படையின் வடபிரதேச ஆணையாளர் டாக்டர் சுகநதன் இன்னாசித்தம்பி குறிப்பிட்டார். மல்வம் கர்த்தார் தேவாலய முன்றலில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு செல்வி ஆர் இராசபூபதி தலைமைவகித்தார்.

வலி தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு அ மகாலிங்கம் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையில்; "எதிர்பாராதவகையில் வன்முறைச் சம்பவங்களில் சிக்கித் தவிக்கும் மக்களுக்கு இத்துறையில் பயிர்சி பெற்றோரின் சேவை மிகவும் பயனுள்ளதாக அமையும் என்றும் குறிப்பிட்டார்.

பிரதேச அத்தியட்சகர் திரு. நா போஜன், உடுவில் பிரஜைகள் குழுத் தலைவர் திரு எஸ் தில்லைநாதன் சுதுமலை பிரஜைகள் குழுத் தலைவர் திரு மார்க்கண்டு, சத்தியபுரம் மாதர் முன்னேற்றச் சங்கத் தலைவி திருமதி ஏ. ஆர். தம்பியப்பா ஆகியோர் உட்பட மற்றும்பலர் உரையாற்றினார்கள்.

முதலுதவிப் பயிற்சிபெற்றவர்களுக்கான சான்றிதழ்களை டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி வழங்கினார்.

# 'புதிய யோசனைகள்: சமஷ்டிக்கு ஒப்பானது' - தினேஷ்

கொழும்பு, செவ்.

"இலங்கை அரசின் உத்தேச மாகாணசபைத் திட்டம் இலங்கையில் சமஷ்டி அமைப்பை ஏற்படுத்துவதற்கொப்பானதாகும். இத்திட்டத்தை அரச வாபஸ்பெறவேண்டும் எல்லது மக்கள் முன் வைத்து சர்வஜனவாக்கெடுப்பு ஒன்றை நடாத்தவேண்டும்".

இவ்வாறு மக்கள் ஐக்கிய முன்னணிச் செயலாளரும், மகரகம தொகுதி எம். பியுமான திரு தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இப்புதிய யோசனைகள்பற்றி அவர் தெரிவித்திருப்பதாவது:-

"புதிய யோசனைகளின் பிரகாரம் இன விகிதாசார அடிப்படையில் காணிப் பங்கீடுசெய்யப்படும்போது வடக்குகிழக்கு முழுவதும் இயல்பாகவே தமிழரின் பாரம்பரியவாசஸ்தலமாக மாறிவிடும் அத்துடன் நீதிமன்று நிர்வகித்தல், வழக்குகளை விசாரித்தல், வெளிநாட்டுக் கடன், நிதியுதவி, நன்கொடைகள் பெறுதல் சம்பந்தமான அதிகாரங்கள் மாகாண சபையிடம் ஒப்படைக்கப்படவுள்ளன இவை இந்நாட்டில் சமஷ்டி அமைப்பு ஏற்படுவதற்கு ஆரம்ப நடவடிக்கையாகும் இந்த யோசனைகள்மூலம் அரசமொழிச்சட்டம் முற்றாக நிராகரிக்கப்படுகிறது. அத்துடன் நாட்டின் பொருளாதாரத்துக்கும் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது இவ்யோசனை தீவிரவாதிகளின் இலட்சியமான தனிநாட்டுக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கான அடித்தளமாகும்". [ய-செ]

# "மாகாண சபைகள்: எமது தாயகத்தைக் கூறுபோடுவதாகும்" - அனுரா

கொழும்பு செவ்.

"உத்தேச மாகாணசபைகள் திட்டம் எமது தாயகத்தை கூறுபோடுதலுக்கொப்பானது இதனால்தான் சுதந்திரக்கட்சி இதனை கடுமையாக எதிர்க்கிறது"

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஸ்ரீ லங்காசுதந்திரக் கட்சியின் உப தலைவர்களிலொருவருமான அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார்

வத்தளை நகரமண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றுகையிலேயே இதனை அவர் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும், "இனப்பிரச்னைக்கு தீர்வொன்றை காணவே நாம் விரும்புகிறோம் ஆனால் அது சிங்கள மக்களையும் இன்னொரு சிறுபான்மை இனமான முஸ்லிம்களையும் பாதிப்பதை அனுமதிக்க முடியாது?"

அரசாங்கம் அரசியல் கட்சிகளுடன் பிரச்னை தீர்வு தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்தும் அதேவேளை தீவிரவாதிகளின் கைகள் இன்னும் மேலோங்கி நிற்கின்றது.

தீவிரவாதத்திற்கு முற்றுப்புள்ளிவைக்காமல் இனப்பிரச்னைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு காண முடியுமென சுதந்திரக்கட்சி கருதவில்லை முதலில் தீவிரவாதம் ஒழிக்கப்பட்ட பின்பே தீர்வு குறித்து பேச்சு வார்த்தை நடத்த வேண்டும்.

தீவிரவாதிகள் தனிநாட்டினை அமைப்பதற்காக தியாகத்துடன் போராடுகின்றனர் ஆனால் அவர்களை எதிர்த்து போராடும் இராணுவத்தினரோ அரசின் சம்பளத்திற்காகவே பணியாற்றுகிறார்கள். இவர்களும் தேசப்பற்றோடுதான் போர்களம் செல்கின்றனரென கருத முடியாது.

நாட்டுப் பிரச்னை விஸ்வரூபம் எடுத்திருக்கும் வேளையில் பிரதமரோ எவ்வித அக்கறையுமின்றி வெளிநாடு

(9 ம் பக்கம் பார்க்க)

# மூவர் காயமடைந்தனர்

யாழ்ப்பாணம், புதன்.

வல்வெட்டித்துறையில் நேற்று முன்தினம் இராணுவம் போராளிகள் மோதலில் இருவர் காயமுற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

யாழ் கோட்டையிலிருந்து நேற்றுமாலை இராணுவம் சுட்டதால் ஒருவர்காயமைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ)

# வெளிக்கள நிலைய பரீட்சைகள்

யாழ்ப்பாணம், புதன்

தொண்டமனாறு வெளிக்கள நிலையப் பரீட்சைகள் இன்று புதன் கிழமையன்று யாழ் கல்விப்பிரதேசம் முழுவதிலும் உள்ள பாடசாலைகளில் ஆரம்பமாகின்றன ஆண்டு ஏழு முதல் பன்னிரண்டு வரையிலான வகுப்புக்கட்கு இப் பரீட்சை நடாத்தப்படுகின்றது. பரீட்சை வினுத்தாள் பொதிகள் இணைப்பு நிலையங்கட்கு அனுப்பப்பட்டுள்ளன என்று பரீட்சைப் பொறுப்பதிகாரி நமது நிருபரிடம் தெரிவித்துள்ளார்.


## பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க், ★ கனடா

(கொழும்பிலிருந்து நேரடிப் பிரயாணம்)

உடனடியாக எமது காரியாலயத்தில் பதிவுசெய்துகொள்ளவும்.

★ சவுதி அரேபியா

கிளினேஸ்க்கு பிரயாண ஒழுங்குகள் 20 நாட்களுக்குள் செய்து கொடுக்கப்படும்.

(i) வைத்தியசாலை
(ii) விமான நிலையம்
(iii) தொலைத் தொடர்புத் திணைக்களம்

மற்றும்:-

★ லிபியா ★ குவைற் ★ டுபாய் ஆகிய நாடுகளுக்கும் உடனடி பிரயாண ஒழுங்குகள் செய்துகொடுக்கப்படும்.

அத்துடன்

பாஸ்போட், பொண்ட், விஸா, ரிக்கற்றிங் என்பன உடனுக்குடன் செய்துகொடுக்கப்படும்.

விபரங்களுக்கு:-

**யூனிவேர்சல் ஏஜென்சிஸ்,**
125 (455), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(பெற்றோலியம் கூட்டுத்தாபன முன்பாக, ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமை.)

(A 796)

## டெக்னிக்கல் என்ஜினியரிங் இன்ஸ்ரிடியூட்
TECHNICAL ENGINEERING INSTITUTE

★ எலக்ரோனிக்ஸ் அன்ட் ரேடியோ, T. V ரிப்பியாரிங்,
★ ஆட்டோ மோபைல் ரிப்பியாரிங்,
★ எயார்கென்டிசனர் அன்ட் ரேப்பிரிஜிரேட்டர் ரிப்பியரிங்,
★ எலெக்ரிக்வயரிங்

புதிய வகுப்புகள் ஆரம்பம்
C/o PILOT INSTITUTE,
151, செம்மணி றோட், நல்லூர்.
(கல்விக்கந்தோருக்கு அண்மையில) (A 795)

## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ ஜேர்மனி
★ பிரான்ஸ் ★ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்
மற்றும்
பாஸ்போட், பொன்ட் (BOND), விஸா, ரிக்கற் ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

**INTERSUN GROUP,**
சின்னத்தம்பி அவெனியு,
(மகளிர் கல்லூரி அருகாமை),
மானிப்பாய். [A 787]

## முருகனைத் தொழுதுய்வோமே

அன்பர்தம் துயரை நீக்கி
அருள்மழை பொழியும் தெய்வம்
நன்மையால் உயிர்கள் யாவும்
நலமுறச் செய்யும் தெய்வம்
பொன்னு லகனைய மாவைப்
பதியினில் கோவில் கொண்டே
முன்வினை நீக்கும் தெய்வம்
முருகன்தாள் தொழு துய்வோமே.

ஃ ஃ ஃ ஃ

முத்தமிழ் விரும்பும் தெய்வம்
முதுதமிழ் நூல்கள் காட்டும்
தத்துவப் பொருளாம் தெய்வம்
சண்முகத் தெய்வம் நாம்செய்
அத்துணை வினையும் நீக்கி
அருளினை நல்கும் தெய்வம்
இத்தரை போற்றும் தெய்வம்
இனியதாள் தொழுதல் செய்வோம்.

ம. பார்வதிநாதசிவம்

★ இன்று மாவைமுருகன் ஐந்தாம் திருவிழா

## "எந்தக் காரியத்தையும் சேவை உணர்வுடன் செய்க"

யாழ்ப்பாணம், புதன்

'நீங்கள் நல்லவர்களாகவும் பண்புள்ளவர்களாகவும் வாழ வேண்டும்; திறமைசாலிகளாகவிருந்து வாழ்க்கையில் முன்னேற்றமடைய வேண்டும் இவற்றிற்கு மூன்று விடயங்கள் அடிப்படையாக உள்ளன. எந்தக் காரியத்தைச் செய்தாலும் சேவையுணர்வுடன் செய்யுங்கள்; எந்த விஷயத்திலும் தீர்க்கமான ஒரு முடிவை மிக விரைவிலே எடுங்கள்; இல்லையென்று சொல்லும்போது அதை இனிமையாகச் சொல்லுங்கள்; மலர்ந்தமுகத்துடன் சொல்லுங்கள்' என வைத்தீஸ்வர வித்தியாலய உயர்தர மாணவ மன்றத்தினரின் வருடாந்த ஒன்று கூடல் நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வித்தியாலயப் பழைய மாணவரும் யாழ். மாவட்ட நிறைவேற்றுப் பொறியியலாளருமான திரு. வை. சம்புநாதன் குறிப்பிட்டார்.

செல்வன் தி. சுந்தரேசன் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் வித்தியாலய அதிபர் திரு சி. சரவணபவன் பேசுகையில் 'வைத்தீஸ்வராவின் பழைய மாணவர்கள் பலர் நாட்டின் பல்வேறு பகுதிகளில் உயர் பதவிகளை வகித்து வருவது பாராட்டிற்குரியது இத்தகைய வைபவங்களுக்குப் பழைய மாணவர்களை அழைத்துக் கௌரவிப்பதிற் பாடசாலைச் சமுதாயம் பெருமையும் மகிழ்ச்சியுமடைகின்றது முன்னர் இங்கே கல்வி கற்று வாழ்க்கையில் முன்னேறியவர்களைக் காணும் போது தாமும் அப்படி உயரவேண்டும் என்ற இலட்சியமும் உயர முடியுமென்ற நம்பிக்கையும் இப்போதைய மாணவர்களிடம் ஏற்படுகின்றன'' என்றார்.

ஆசிரியை திருமதி செ. பொன்னுச்சாமி யாழ். இந்துக் கல்லூரி மாணவன் செல்வன் அருள்ஜோதி, வித்தியாலய அபிவிருத்திச் சங்க செயலாளர். திரு. மு. ஜெகதீசன் ஆகியோரும் இவ் வைபவத்திற் பேசினர். மன்றச் செயலாளர் செல்வன் சி, கண்ணதாசன் நன்றியுரை கூறினார்.

## கம்பியூட்டர் பத்திரங்களால் ஒழுங்கீனங்கள் நீக்கி ஒய்வூதியம் பெறமுடியும்"

புலோலி. செவ்.

''ஓய்வூதிய மோசடிகளைத் தவிர்த்து ஓய்வூதியம் பெறுவோர்களின நடவடிக்கைகளை இலகுபடுத்துமுகமாக ஓய்வூதியப்பகுதியினர் பல்வேறு வகையான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர் இதன் அடிப்படையிலேயே கம்பியூட்டர்மூலம் தயாரிக்கப்பட்ட ஓய்வூதிய விபரப் பத்திரங்கள ஓய்வூதியம் பெறுவோருக்கு வழங்கப்பட்டுவருகின்றன. கம்பியூட்டர் மூலம் தயாரிக்கப்பட்ட ஓய்வூதியப் பத்திரங்களை வழங்குவதனால் ஒழுங்கீனங்கள், மோசடிகளை நீக்கி ஒழுங்காகஓய்வூதியத்தை வழங்கமுடியும்''

இவ்வாறு யாழ் கச்சேரி ஓய்வூதியக்கிளைப் பிரதம கணக்காளர் திரு. வ இராமச்சந்திரன் வடமராட்சி வடக்கு கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஓய்வூதியம் பெறுவோர் சங்க 2வது ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பிரதம விருந்தினராக்கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு சங்கத் தலைவர் திரு சி பாலசிங்கம் தலைமைதாங்கினார்.

ஓய்வூதியக்கிளை பிரதம கணக்காளர் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது: ஓய்வூதியம் பெறுவோர் ஒழுங்காகவும், விரைவாகவும் எதுவித சிரமுமின்றி ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதே ஓய்வூதியப்பகுதியினரின் நோக்கமாகும். ஓய்வூதியம் பெறுவோர் தமது ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு அனுபவித்துவந்த கஷ்டங்கள் நீக்கப் பட்டுவருகின்றன. இங்கு ஓய்வூதியம்பெறுவோர் சங்கம் சிறப்பாகச் செயற்படுவது போல் சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் ஓய்வூதியம்பெறுவோர் சங்கங்கள் அமைக்கப்பட்டு செயற்பட வேண்டும்.

தலைவர் திரு. பாலசிங்கம் தலைமைஉரையில் குறிப்பிட்டதாவது: ''ஓய்வூதியம்பெறுவோர் சங்கம் மிக வயோதிப காலத்தில் பராமரிக்க எவரும் இல்லாதவர்களுக்கு உதவி புரிவதற்கான திட்டம் ஒன்றை வகுத்துவருகின்றது'' என்றார்.

## "உணவு உற்பத்தியில் அக்கறையுடன் ஈடுபட வேண்டும்"

பண்டத்தரிப்பு, செவ்.

''எமது விவசாயிகள் இன்று பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருந்த போதிலும் உணவு உற்பத்தியில் அதிக அக்கறையுடன் ஈடுபடவேண்டும். எமது சகல மூலவளங்களையும் பயன்படுத்தி விவசாயத்துறையில் முன்னேற்றம் காணப்பட வேண்டியது அவசியமாகும். அதிகரித்துவரும் மக்கள் தொகைப் பெருக்கத்திற்கேற்பஉணவுஉற்பத்தியும் அதிகரிக்கப்பட வேண்டும்''.

பண்டத்தரிப்பு திருச்சபை தேவாலயத்தில் நடைபெற்ற மரம் நாட்டுவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திரு ச. கிருஷ்ணபிள்ளை குறிப்பிட்டார்.

வண. சாம். தம்பு அடிகள் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் தொழிலதிபர் திரு க. கனகராசா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு மரக்கன்றுகளை அன்பளிப்பு செய்தார்.

யாழ். மாவட்ட உதவி காணி ஆணையாளர் திருமதி க. இராமச்சந்திரன் இவ் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் காணிகளின் மண் வளத்தைபபேணி பாதுகாக்க மரங்கள் நாட்டப்படவேண்டியது அவசியம் என்றும் காடுகள் அழிக்கப்படுவதினால் எமது சூழல், சுற்றுடல் மிகவும் பாதிககப்படும் என்றும் குறிப்பிட்டார். தொல்புரம் விவசாயப் போதனாசிரியர் திரு ச. தம்பிராசா, ஓய்வுபெற்ற விவசாய திணைக்கள உதவிப்பணிப்பாளர் திரு எஸ். சதாசிவம்பிள்ளை, பண்டத்தரிப்பு விவசாய விஸ்தரிப்பு அலுவலர் திரு. வை. பாலகிருஷ்ணன், பண்டத்தரிப்பு பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. சபா நாராயணன் ஆகியோர் உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்கள். (க)

## இன்றைய பலன்

மாதம்- ஆனி
திகதி- 32 (1986-07-16)
கிழமை- புதன்
திதி- நவமி காலை 7-07ன் மேல் தசமி
நக்ஷத்திரம்- சுவாதி மு. ப. 11 33ன் மேல் விசாகம்

மேடம்- உள்ளத்தில் உவகைக் கூத்து. இல்லத்தில் மகிழ்ச்சி நிலவும். மனதில் புதிய எண்ணங்களும் தலை தூக்கும்.

இடபம்- நண்பர்களுடன் கருத்து வேற்றுமை உருவாகும். வியாபாரிகளாயின் பங்காளிகளுடன் பகைத்துக் கொள்ள வேண்டாம். பொருட் செலவும் உண்டு.

மிதுனம்- தெய்வ நம்பிக்கை மேலோங்கி நிற்கும். சிலருக்கு ஆத்மீக விடயங்களில் அதிக ஆர்வம் ஏற்படலாம். பொதுப்பணிகளில் ஈடுபடுவதன்மூலம் பொதுமக்களின் ஆதரவைப் பெறுவர்.

கடகம்- வியாபாரத் துறையில் ஈடுபடுபவர்கள் இன்று அதிக முதலீட்டைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த விடயத்தில் நஷ்டமேற்படலாம். நண்பராலும் தொல்லையுண்டு.

சிங்கம்- தொழிற்துறையில் முன்னேற்றம் காணப்படும். நீண்டநாள் கொடுக்கல் வாங்கல் நிவர்த்தியாகும். மக்களின் பிரபல்யம உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

கன்னி- வாய்வுக் கோளாறு உடல்நலத்தைப் பாதிக்கலாம் உணவு விடயத்தில் சுகாதாரம்வேண்டும். தானிய நஷ்டத்திற்கும் இடமுண்டு

துலாம்- மனக்கோட்டை கட்டுவீர்கள். எதிர்பார்த்ததில் ஏமாற்றம் விளையும். உடல்நலமும் பாதிக்கப்படலாம்.

விருச்சிகம்- ஒளிமயமான சூழ்நிலை உருவாகும். வீட்டிலுள்ளவர்களின் அன்பும்ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும். இருமனம் கலந்தவர்களின் மத்தியில் இனிமை தவழும்.

தனுசு- எதிர்பார்த்த வேதனம் இடையில் தடைப்படலாம். சிலர் வாழ்க்கையில் கடன் தொல்லையும் அதிகரிக்கும். சகோதரவழி சஞ்சலமும் உண்டு

மகரம்- ஆக்கப்பணியில் ஈடுபடுவீர்கள். பிறருடைய ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். தாய்வழிமூலம் நற்செய்தி கிடைக்கலாம்.

கும்பம்- பிறருடன் பகைத்துக் கொள்ள நேரிடும். பிள்ளைகளின் தொல்லைகள் கவலையைத் தரும். குடும்பத்தில் சிறுபூசலுக்கும் இடமுண்டு.

மீனம்- நம்பிக்கை மோசடி நடக்கக்கூடும். பூமிப்பிணக்குகளால் வழக்கு விவகாரங்களில் மாட்டிக் கொள்ள நேரிடும், எதிலும் உணர்ச்சிவசப் படாதிருக்கவும்.

திருமலை ரவீந்திரன்

## வரியிறுப்பாளர் பாதிப்பு

நெல்லியடி, செவ்வாய்.

நெல்லியடி கரவெட்டி, கரணவாய் ஆகிய பகுதிகளில் சட்டவிரோத மின்பாவனை பெருமளவில் நடைபெற்று வருவதால் இப்பகுதிகளில் வரியிறுப்பாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளது மட்டுமன்றி அரிசியாலைகள், தனியார் கைத்தொழில் நிறுவனங்கள் கல்வி நிலையங்களும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன

இவற்றைத் தடுத்து நிறுத்தும் நோக்கத்துடன் நெல்லியடிப் பட்டிணசபைப் பகுதிக்கான பாதுகாப்புச்சபைச் செயலாளர் திரு. ஜே எஸ் இராஜேந்திரம் நெல்லியடி பட்டிணசபை அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மின்சாரசபை ஆகியோருடன் தொடர்பு கொண்டுள்ளார்.

## தமிழ்த்தின விழாவில் மாணவர்களின் எழுச்சி

யாழ்ப்பாணம், புதன்

''யாழ்.மாவட்டபாடசாலைகளில் மாணவர்களின் கல்வி ஆக்க முயற்சிகளை எடுத்துக் காட்டும் கல்விப் பொருட் காட்சிகள் பரவலாக நடைபெறும் இன்றைய சூழலில் இங்கு தமிழ்த்தின நிகழ்ச்சி நடைபெறுவது மாணவர்களின் எழுச்சியை நன்குபிரதிபலிக்கின்றது. தமிழ் மொழியை அழிப்பது இலகு அல்ல. எததகைய எதிர்ப்புகள் எந்த வடிவில் தோன்றினாலும் அதன் புகழ் மங்கி விடவோ மறைந்துவிடவோ முடியாது''.

யாழ் குருநகர் புனிதயேம்ஸ் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற தமிழ்த்தின வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வட்டாரக் கல்வியதிகாரி திரு. இ. சிவானந்தன் தமது உரையில் தெரிவித்துள்ளார்.

வித்தியாலயஅதிபர் திரு. அ. ஸ்ரானிஸ்லாஸ் மங்கள தீபம் ஏற்றி வைபவத்தை ஆரம்பித்துவைத்தார். தமிழ்தினப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசுகளை அருட்தந்தை பீட்டர் துரைரத்தினம் வழங்கினர். வைபவ இறுதியில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (ஐ)

## திருப்பணி வேலை பூர்த்தி

யாழ்ப்பாணம், புதன்

கோப்பாய் அத்தித் தோட்டம் பரமேஸ்வரியம்பாள் ஆலயத் திருப்பணிச்சபையினரால் மேற்கொள்ளப்பட்ட திருப்பணி வேலைகள் யாவும் திட்டமிட்ட பிரகாரம் பூர்த்தியடைந்து விட்டது. ஆவணி மாதத்தில் மகா கும்பாபிஷேகம் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

மேற்படி ஆலய திருப்பணிச்சபைத் தலைவர் திரு கே. செல்வவிநாயகம் தலைமையில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் மகாகும்பாபிஷேகம் ஆகஸ்ட் மாதத்தில் செய்வதென முடிவு செய்யப்பட்டிள்ளது. [ஐ]

## அடிக்கல் நாட்டு விழா

யாழ்ப்பாணம், புதன்.

நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் தேவாலயம் பல லட்சம். ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதற்கான அத்திபாரக்கல் நாட்டுவிழா புனித ஆசீர்வாதப்பர் பெருமானின் ஊர்வலத்தினமான 10ம் திகதிகாலை நடைபெற்றது.

யாழ். ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை அத்திபாரக் கல்லை நாட்டி வைத்தார். புனித ஆசீர்வாதப்பர் ஆலய பங்குத் தந்தை வண யோசப் அடிகள், புனித ஆசீர்வாதப்பர் வித்தியாலய அதிபர்அருட் சகோதரி லைசா உட்பட பல அருட் சகோதரர்கள், அருட் சகோதரிகள் இவ் விழாவில் கலந்து கொண்டனர். (ஐ)

## பயிற்சிகள் நடாத்த ஏற்பாடு

வல்வெட்டித்துறை, செவ்,

ஆங்கிலச் சுருக்கெழுத்தாளர் தாராதரப்பத்திரப் பயிற்சியும், படம்வரை பயில்வோர் பயிற்சியும், யாழ் தொழில் நுட்பக் கல்லூரியில் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கல்லூரியின் அதிபர் திரு சி. இராஜேந்திரா தெரிவித்துள்ளதாக வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் பிரதம அமைப்பாளர் திரு க. வ. சிவச்சந்திரதேவன் தெரிவித்தார்

## தேர்த் திருவிழா

சுழிபுரம், செவ்வாய்.

வழக்கம்பரை அம்பாள் தேர்த்திருவிழா இம்மாதம் 20ம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறும்.

# ‘உள்நாட்டு உற்பத்திக்கு ஊக்கம் கொடுக்க வேண்டும்’

## விவசாயக் கருத்தரங்கில் உரை

யாழ்ப்பாணம், புதன்

‘விவசாயம்செய்யவேண்டும் என்ற ஆர்வமும் ஊக்கமும் 1977ம் ஆண்டளவில் இருந்தது போன்று இன்று இல்லை. ‘ம ரர் என் எம். பெரேராவின் ஊக்கத்தினால் அன்று நாடு விவசாயத்தில் நல்ல முன்னேற் றம் அடைந்திருந்தது.’’

நல்லூர் ப நோ கூ. சங்க ஆதரவுடன் திருநெல்வேலி மறுமலர்ச்சிமன்றம் நடாத்திய விவசாயக்கருத்தரங்கில்பேசும் போது விவசாய விரிவாக்க அதிகாரி திரு. எஸ். பரமலிங் கம் இவ்வாறு குறிப்பிட்டார்.

திருநெல்வேலி இந்து வித்தி யாலயத்தில் நடைபெற்ற இக் கருத்தரங்கிற்கு நல்லூர் ப. நோ. கூ. சங்கத் தலைவரும், மறுமலர்ச்சி மன்றத் தலைவரு மான திரு. எஸ். செல்வரத்தி னம் தலைமை தாங்கினார்.

திரு பரமலிங்கம் தொடர் ந்து பேசுகையில் குறிப்பிட்ட தாவது:

விவசாயம் பெருகவேண்டு மானால் உள்நாட்டு உற்பத் திக்கு ஊக்கம் கொடுக்கவேண் டும். நம் விளைநிலப்பயிர்களை நாம் பாவனை செய்யவேண் டும். ஒவ்வோர் வீட்டிலும் வீட்டுத் தோட்டம் செய்யப் படவேண்டும்.

கருத்தரங்கிற்குத் தலைமை வகித்த திரு. செல்வரத்தினம் தமது உரையின்போது கூறிய தாவது: விவசாயம் செய்வ தற்கு நிலம் தற்போது குறை ந்துவருகிறது முன்புஅரசாங்க சேவைகளில் தமிழர்கள் அதி கம் இருந்தனர். இன்று அந் நிலைமை இல்லை. விவசாய நிலமும் குறைந்து வருகிற இவ் வேளையில் இருக்கின்ற நிலத் தில் ஊக்கமாக விவசாயம் செய்வது எமது கடமையா கும்.

விவசாயத்திணைக்களத்தைச் சேர்ந்த திரு குணரத்தினம் தமது உரையின்போது கூறிய தாவது; சேதனப் பசளைகளைப் பாவிப்பது யாழ்ப்பாணப்பிர தேசத்தில் குறைந்துவருகிறது. காரணம் இப்பசளையை வவ னியா கடந்து சென்றே முன்பு கொண்டுவந்தோம் இப்போது அந்நிலைமை இல்லை சேதனப் பசளையே எம்மண்ணுக்கு மிக வும் முக்கியமானதும் யாழ்ப் பாண விவசாயிகளுக்கு பூச்சி கொல்லி மருந்துக்கு 25 வீதம் செலவாகிறது.

திரு. சத்தியானந்தசிவம் தமது உரையுல் கூறியதாவது; கால்நடைகள் யாழ்ப்பாண விவசாயத்தைப் பெரிதும் பாதிக்கச் செய்கின்றன. விவ சாயிகளின்உற்பத்திப்பொருட் களுக்கு உத்தரவாத விலை நிர் ணயிக்கப்படவேண்டும்.

ஏட்டிலே விவசாயம் செய் யாமல் நிலத்தில் விவசாயம் செய்யப்படவேண்டும்,

மில்க்வைற் அதிபர் திரு க. கனகராசா இக் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களுக்கு மரக்கன்றுகளை இலவசமாக வழங்கினார்.

விவசாயக் கலாநிதி திரு. குணராஜசிங்கம் விவசாயம் சம்பந்தப்பட்ட நீண்ட கருத் துரையை வழங்கினார்.

இக்கருத்தரங்கில் யாழ்ப்பா ணத்தைச் சேர்ந்த விவசாய உத்தியோகத்தர்கள், கமநல சேவை உத்தியோகத்தர் செல்வி இராசதுரைஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண் டனர். (ஐ)

# முருகன் அடியைத் தாங்கி நிற்பேன்

முருகன் தான் எனக்கு உயிர் தந்தவன்- மால்
மருகன் தான் எனக்கு மனம் தந்தவன்
உயிர் தந்த முருகனை உணரு வேனே- அந்த
மயிலூர் தியைத் தினம் கருது வேனே

குமரன் தான் எனக்கு உடல் தந்தவன்- வான்
அமரன் தான் எனக்கு வலி தந்தவன்
உடல் தந்த குமரற்குக் கோவி லமைப்பேன்- திருக்
கடம்பன் தன் பெயர்க்குக் காவடி எடுப்பேன்

கந்தன் தான் எனக்குக் கரம் தந்தவன்- சிவன்
மைந்தன் தான் எனக்கு மொழி தந்தவன்
கரம் தந்த கந்தனைக் கை தொழுவேன்- ஆதி
அரன் புத்திரன் தனையே தோத் தரிப்பேன்

வேலன் தான் எனக்குக் கால் தந்தவன்- வண்ணக்
கோலம் உடை யோனே கண் தந்தவன்
கால் தந்த வேலனைத் தேடிச் செல்வேன்- கூர்
வேல் ஏந்தும் அழகனைக் கண்டு களிப்பேன்

அயிலான் தான் எனக்குக் கல்வி தந்தவன்- புள்ளி
மயிலேறும் பெரு மானே கவி தந்தவன்
கல்வி தந்த அயிலானைக் கலையில் வடிப்பேன்- தமிழ்ச்
சொல்லிற் பா தொடுத்துச் சூட்டி மகிழ்வேன்

சேந்தன் தான் எனக்கு வரம் தந்தவன்- வெற்றி
ஏந்தல் தான் எனக்குச் சுகம் தந்தவன்
வரம் தந்த சேந்தற்கு வாழ்த் துரைப்பேன்- என்றன்
சிரமேற் குகன டியைத் தாங்கி நிற்பேன்.

— மணிமன்றன்

# லயன்ஸ்கழகத்தின்பல்வேறு திட்டங்கள்

பண்டத்தரிப்பு, செவ்.

‘‘எமது லயன்ஸ்கழகம் இவ் வருடத்தில் இரத்ததானம், முதலுதவி சிறுவர்களுக்கான போஷாக்கு உணவை உள்ளூரி லுள்ள மூலப்பொருட்களிலி ருந்து தயாரித்து அறிமுகப் படுத்தல், சுழிபுரம் காட்டுப் புலம் பகுதியில் தொழு நோயை தடுத்தல் போன்ற பல்வேறு திட்டங்களை செயற் படுத்தவுள்ளது. இதற்கு சகல ரினதும் ஒத்துழைப்பும் ஆதர வும் எமக்கு அவசியமாகும்.’’

இவ்வாறு வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் எட்டா வது வருடாந்த வைபவத் திலும், புதிய நிர்வாகசபை பதவி ஏற்பு வைபவத்திலும் உரையாற்றுகையில் வட்டுக் கோட்டை லயன்ஸ் கழகத் தின் புதிய தலைவர் டாக்டர் எமில் அத்தனாசியார் குறிப் பிட்டார்

இவ் வைபவத்தில் பிரதம அதிதியாக பிரதி மாவட்ட ஆளுநர் டாக்டர் ரி. பகீரன் கலந்துகொண்டார்.

கழக சிரேஷ்ட உப தலைவர் டாக்டர் அல்போன்சஸ் அத்தனாசியார், கழகத்தின் கடந்த வருடத் தலைவர் திரு. உ. ந. தேவகடாட்சம், வலயத் தலைவர் திரு. யூகேந்திரன், யாழ். லயன்ஸ் கழகத் தலைவர் திரு. எஸ். மகேந்திரா ஆகி யோரும் உரையாற்றினார்கள்

திருமலை, வவனியா ஆகிய பகுதிகளிலிருந்து சில்லாலையில் தஞ்சமடைந்திருக்கும் அகதி கள் நலன் கருதி தையல் யந் திரம் ஒன்றும் இக்கூட்டத் தில் அன்பளிப்பு செய்யப்பட் டது.

தெல்லிப்பழை மகாஜனக்

(9 ம் பக்கம் பார்க்க)

# “சைவம் உள்ளவரை நாவலர்புகழ்நிலைத்திருக்கும்

மண்டைதீவு. செவ்

‘‘உலகில் சைவமும் தமி ழும் இருக்கும்வரை நாவலர் பெருமானின் புகழும் பெரு மையும் நிலைத்து நிற்கும். சைவசமயத்தையும் சமயகலா சாரத்தையும், பேணிப்பாது காக்க சைவர்களை வாழ்வித்த வர் நாவலர் பெருமானாகும். அவரது பணிகளையும் போத னைகளையும் நாம் பேணிப் பாதுகாப்பதன் மூலமே சைவத்தையும் தமிழையும் பேணுபவர்களாக வாழமுடி யும்.’’

என்று நாவலர் வரலாற் றுக் கண்காட்சிக்கான சிற் பங்களை உருவாக்கும் அங்கு ரார்ப்பண வைபவத்தில் ஆசி யுரையாற்றிய ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அதரி வித்தார்,

சனிக்கிழமை மாலை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெற்ற இவ் வைபவத்திற்கு நாவ லர் சபையின் துணைத்தலைவர் களில் ஒருவரான பேராசிரி யர் அ. சண்முகதாஸ் தலைமை தாங்கினார். வித்து வான் க. சொக்கலிங்கம் அவர்களால் தயாரிக்கப்பட்ட நாவலர் வரலாற்றுச் சிற்பங் களுக்கான தொகுப்பு இச் சடையில்சமர்ப்பிக்கப்பட்டன

திரு ம. சிவராசா; திரு எஸ் வி. முருகேசு, திரு, எஸ். ரி. தியாகராசா. திரு. த. சண்முகலிங்கம் ஜே. பி. ஆகி யோர் மங்களவிளக்கேற்றி இவ்வைபவத்தைத் தொடக்கி வைத்தனர் யாழ்மாநகர ஆணை யாளரும், நாவலர்சபையின் துணைத்தலைவருமான திரு. சீ. வீ. கே. சிவஞானம் வர வேற்புரை நிகழ்த்தினர்.

பேராசிரியர் அ. சண்முக தாஸ் பேசுகையில் எமது சரித் திரங்களை, வரலாறுகளை அழி யாமல் பாதுகாப்பதற்கு நாம் ஆற்றும் பணிகள் பயன்பட வேண்டும். இந்தவகையில் நாவலர் வரலாற்றுக் கண் காட்சியும் எமது எதிர்கால சமூகத்திற்கு பயனுள்ளதாக அமையவேண்டும் என்றார்.

அமையவுள்ள சிற்பங்களுக் கான அறிமுகவுரையை யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவைத்தலைவர் திரு. தி சி. சண்முகலிங்கம் நிகழ்த்தி னர்.

சிற்பங்களை உருவாக்குவதற் கான ஆரம்பக் கற்களை முறையே நாவலர் சபையின் இணைச்செயலாளர்களான திரு: சி. சிவசுப்பிரமணியம். திரு நா. சோமகாந்தன், துணைத்தலைவர்களான திரு.சி. வீ. கே. சிவஞானம், பேரா சிரியர் திரு அ சண்முகதாஸ், இந்து இளைஞர் பேரவைத்தலை வர் திரு தி. சி சண்முகலிங் கம் ஆகியோர் நல்லை ஆதீன சுவாமிகளின்ஆசியுடன் சிற்பா சாரியாரிடம் கையளித்தனர். இந்துஇளைஞர் பேரவைச்செய லாளர் நன்றி கூறினர்.

# ‘‘மக்களுக்கான சேவையை தூய்மையுடன் செய்ய வேண்டும்’’

(புலோலி)

‘‘கிராமிய அபிவிருத்தி மேம்பாட்டிற்கு கிராமியப் பகுதிகளில் அமைதி, ஒழுங்கு கட்டுப்பாடு என்பன நிலை நிறுத்தப்படவேண்டும். கிராமடபகிதிகளில் அமைதி, ஒழுங்கு, கட்டுப்பாடுகள் நில வினால்தான் கிராமமக்களின் வாழ்க்கைத்தரம்உயர்வடைய முடியும். கிராமங்கள்தோறும் அமைக்கப்பட்டுவரும் இணக்க சபைகள் இந்த இலட்சியத் துடனேயே அமைக்கப்பட்டு வருகின்றன இவ் இணக்க சபைகள் சிறப்பாக இயங்க அப்பகுதிகளின் மக்கள் பூரண ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும்.

இவ்வாறு, புலோலிகிழக்குப் பகுதிக்கான இணக்கசபை அமைப்புக் கூட்டத்திலே கலந்து கொண்டு உரையாற் றிய பருத்தித்துறை பிரஜை கள் குழு உபதலைவர் சட்டத் தரணி கே. முத்துக்குமாரு குறுப்பிட்டார். புலோலி கிழக்குப் பிரஜைகள் குழுத் தலைவர் திரு வே. ஐயாத் துரை தலைமைதாங்கினர். தொடர்ந்து உரையாற்றிய அவர் மக்களுக்கு சேவை செய்யவரும் சேவையாளர் கள் தமது தூய்மையான பாரிய பொறுப்புக்களை மறந்து விடக் கூடாது என் றார்.

பருத்தித்துறை பிரஜைகள் குழுத்தலைவர் திரு, எஸ். தேவதாசன் உப தலைமர், திரு எஸ் கதிரேசு தும்பளை வராத்துப்பளை பிரஜைகள் குழுச் செயலாளர் திரு எஸ். திருச்செல்வம் [முன் னாள் இணக்கசபைத்தலைவர்] பருத்தித்துறையின் பிரஜை கள் குழு மத்தியசபை உறுப்பினர்களான திரு வாளர்கள். எஸ். காந்து தாசன் சட்டத்தரணி வீ. கே கணபதிப்பிள்ளை திரு, எஸ். கிருஸ்ணமூர்த்தி ஆகி யோரும் உரையாற்றினர்.

# சட்டவிரோத மின்பாவனையால் பாதிப்பு

சுழிபுரம், செவ்,

சுழிபுரம் அபிவிருத்திச்சபை உப அலுவலக எல்லைக் குட்பட்ட பகுதிகளில் சட்ட விரேதே மின் பாவனை அதி கரித்து வருவதால் தினமும் திடீரென்று மின் வெட்டு ஏற்படுகிறது. இதனால் சட்ட வரோத மின்பாவனையாளர் கள் பெரும் பாதிப்புக்கு உள் ளாகியுள்ளனர்.

அபிவிருத்திசபை உப அலு வலக மின்சார ஊழியர்கள் சட்டவிரோத மின்சாரம் எடுப்பவர்கள் பற்றிய விபரம் அடங்கிய பட்டியல் ஒன்றை தயாரித்து கிராம அபிவிருத் திச் சங்கம் மற்றும் பொது இயக்கங்கள் உதவியுடன் சட்டவிரோத மின்பாவனை யாளர்களை கட்டுப்படுத்த நட வடிக்கை மேற்கொண்டுள் ளனர்.

# கல்விபெறுபேறுகளைவைத்து புலமைப் பரிசில் திட்டம்

சாவகச்சேரி, செவ்,

‘‘கல்விக்கு ஒழுக்கம் மிகவும் முக்கியமானதாகும், இந்த ஒழுக்கம் அதிகாரி - அதிபர் - ஆசிரியர் மட்டங்களில் இருந்து வளர வேண்டும் தமிழ்த்தாய் இன்று வறுமைப் பட்டிருக்கின்றாள். இவ்வறு மையைப்போக்கநாம் எல்லோ ரும் பாடுபடவேண்டிய கால கட்டத்தில் இன்று இருக் கின்றோம். விஷேடமாக இன்று பாடசாலைகளில் கல்வி பயில்கின்ற மாணவர்கள் தம்கல்வியில் எவ்வளவு கவ னம் செலுத்துகின்றார்களோ அதேபோலவே பாடசாலை உடமைகளையும் பேணிப் பாதுகாக்கப் பழகிக்கொள்ளல் வேண்டும்’’.

இவ்வாறு யாழ். மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு இ சுந்தரலிங்கம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு வைபவத்தில் முதன்மை அதிதியாகப் பங்கு கொண்டு சிறப்புரையாற்றும் போது தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் திரு. கே. எஸ். குகதாசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், அவர் கல்லூரியின் பரிசில் நாள் அறிக்கையைச் சமர்ப் பித்தார்.

திரு. இ சுந்தரலிங்கம் அங்கு தொடர்ந்து உரை யாற்றுகையில்,

‘‘பாடசாலைகளின் கல்விப் பெறுபேறுகளை மையமாக வைத்து யாழ். மாவட்டத் திணைக்களம் மிக விரைவில் புலமைப்பரிசில் திட்டத்தினை அறிமுகப்படுத்தவுள்ளது. அதில் முக்கியமாக விஞ்ஞா னம், கணிதம், தமிழ், ஆங் கிலம், சமூகக்கல்வி போன்ற பாடங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்’’ எனவும் தெரிவித்தார்.

மேலும் விழாவில் யாழ். மாவட்ட பிரதம கல்வி அதி அதிகாரி திரு. கு. சோமசுந் தரம், சாவகச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஆ . தங்கராசா ஆகியோர் உரை யாற்றினர்.

திருமதி தேவராணி சுந்தர லிங்கம், கல்லூரி மாணவ மாணவியருக்கான பரிசில்களை வழங்கினர். [க]

# தரமுயர்வு

யாழ்ப்பாணம், புதன்

அரசாங்க மருந்துக் கலவை யாளர்கள் மத்தியதரதொழில் நுட்ப உத்தியோகத்தர் தரத்திற்கு உயர்த்தப்பட்டுள் ளனர்.

மருந்துக் கலவையாளர் சங்கம் கடந்த ஐந்து வருட காலமாகத் தமது தரத்தை உயர்த்தும்படி பலதடவை அரசாங்கத்துடன். கோரிக்கை விடுத்தது குறிப்பிடத்தக்கது.

## வவனியாவில் மின் இணைப்புத் திட்டம்

வவனியா, செவ்வாய்

பம்பை மடுவிற்கான மின் இணைப்பு வேலையினை ஆரம்பிக்குமாறு வவனியா மின்சார சபையின் திட்டப் பணிப்பாளர் திரு ரி. இலங்கா நேசன் கேட்டுள்ளார்.

மேற்படி மின் இணைப்பு திட்டம் உலக வங்கியின் நிதி உதவியுடன் செய்யப்படுகின்றது. இதற்கு 21 இலட்சம் ரூபா செலவிடப்படவுள்ளது.

புளியங்குளம் மின் இணைப்பு வேலைகளும் 30 இலட்சம் ரூபா செலவில ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



செல்வன் ஜெகநாதன் கஜேந்திரன்

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையைச் சேர்ந்த ஜெகநாதன் - சிவகௌரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் செல்வன் கஜேந்திரன் இன்று (16-7-86) 1-வது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அக்கா, அம்மம்மா, அப்பப்பா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமன்மார், மாமிமார், மச்சாள்மார், மச்சான்மார், உற்றார், உறவினர், அனைவரும் பல்கலையும் கற்று சிறப்புடன் நீடூழி வாழ வாழ்த்துகின்றார்கள்.

A 934

# 'புற்றுநோய் பரம்பரை வியாதியல்ல'

## வைத்திய கலாநிதி கருத்து

மானிப்பாய், செவ்வாய்.

''புற்றுநோய் ஒரு பரம்பரை வியாதியல்ல. இந்த நோய் எவ்விதம் ஏற்படுகின்றதென்பதற்கான காரணங்களை அறிந்திருந்தால் தடுப்பது மிகவும் இலகுவாக இருக்கும். எந்த நோயும் தோன்றிய பின் சிகிச்சையளிப்பதிலும் பார்க்க அது தோன்றுமற் தடுப்பதே சிறந்தது. இது புற்றுநோயைப் பொறுத்தளவில் மிகப் பொருத்தமானது.''

இவ்வாறு 'புற்றுநோய்த் தடுப்பு சிகிச்சை' பற்றி உரை நிகழ்த்திய யாழ். பெரியாஸ்பத்திரி சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி வி. கிருஷ்ணராஜா தெரிவித்தார்.

ஆனைக்கோட்டை ஹோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர் மன்றத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இக்கூட்டம் அதிபர் திருமதி பா. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

வைத்திய கலாநிதி கிருஷ்ணராஜா தொடர்ந்து தமதுரையில் கூறியதாவது:-

''உடலில் ஏற்படும் தீங்கான வளர்ச்சிகள்பற்றி நாம் மிக அவதானமாக இருக்கவேண்டும். இது சம்பந்தமாக நாம் அவ்வப்போது உரிய வைத்திய ஆலோசனை பெற்றுக்கொண்டால் இந்த நோயிலிருந்து நம்மை நாம் பாதுகாத்துக் கொள்ளலாம்.

புற்றுநோய் எவ்விதம் பரவுகிறது என்பதுபற்றியும் நாம் அறிந்து வைத்துக்கொள்வது அவசியம்.

புகைபிடித்தல், மது அருந்துதல், வெற்றிலை பாக்கு உட்கொள்ளல், அதிக காப்பி அருந்துதல், பூஞ்சணம்பிடித்த பனங்கிழங்கு, பனம்மா, நிலக்கடலை ஆகியவற்றைத் தொடர்ந்து பாவித்தல், மிகவும் சூடான உணவு உட்கொள்ளுதல், செயற்கையாகத் தயாரிக்கப்பட்ட உணவுப் பொருட்களுக்குச் சேர்க்கப்பட்ட சில பதார்த்தங்கள் என்பன புற்றுநோய் ஏற்படும் வாய்ப்புக்களை உண்டாக்குகின்றன.

சத்துள்ள உணவு வகைகளை குறிப்பாக 'உயிர்ச்சத்து-ஏ' நிறைந்துள்ள உணவுவகைகளை உட்கொள்வதாலும், மருத்துவரின் ஆலோசனையின்றித் தொடர்ந்து மருந்துகள் பாவிப்பதைத் தவிர்ப்பதாலும், உரிய சிகிச்சையை உடன பெற்றுக் கொள்வதாலும் இந்நோயிலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ளலாம்

இரண்டு கிழமைக்கு மேலாகத் தொடரும் மஞ்சட்காமாலை சதையில் தோன்றும் புற்றுநோய்க்குக் காரணமாகலாம்.

புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டுபிடிப்போமானால் இதனை முற்றிலும் குணப்படுத்துவது சுலபமாக இருக்கும்'' என்றும் அவர் எடுத்துக் கூறினார்.

வடமாகாண புற்றுநோய் தடுப்புச் சங்கத் தலைவா வைத்திய கலாநிதி மா ஜெகநாதனும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்.

ஆசிரியர் திரு க. கணேசலிங்கம் நன்றிகூறினார்.

## ஷேக்ஸ்பியர் நாடகப் போட்டி

யாழ்ப்பாணம், புதன்

லயன்ஸ்கழகத்தின் ஆதரவுடன் இளம் கிறிஸ்தவ இளைஞர் சங்கத்திலுல் (வை. எம் சீ. ஏ) நடத்தப்பட்ட ஷேக்ஸ்பியர் நாடகப் போட்டியில் மாணவர் பிரிவில் புனித சம்பத்தரிசியார் கல்லூரி தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக முதல் பரிசினை சுவீகரித்துக் கொண்டுள்ளது.

திட்டமிடல் அமைச்சின் துணைப் பணிப்பாளர் திரு எஸ். சிவதாசனும் பாரியாரும் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்ட மேற்படி நாடகப் போட்டியில் சிறந்த நடிகருக்கான விருதை புனிதசம்பத்தரிசியார் கல்லூரி மாணவர் பிரியாந்கா சந்தியாப்பிள்ளையும் சிறந்த நடிகைக்கான விருதை சுண்டுக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மாணவி சுபதரா குணரத்தினமும் வென்றெடுத்தனர். [வி]

## லயன்ஸ்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கல்லூரியில் கற்கும் வசதியற்ற ஏழைமாணவர் ஒருவருக்கு புலமைப்பரிசில் ஒன்றும் வழங்கப்பட்டது. அத்துடன் சில்லாலை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தளபாடங்களும் அன்பளிப்பு செய்யப்பட்டன

இறுதியில் கழக உபதலைவர் கல நிதி வி நித்தியானந்தன் நன்றியுரை நிகழ்த்தினர்.

## எமது தாயகத்தை

[6ம் பக்கத் தொடர்ச்சி]

களில் சுற்றுப்பயணம் செய்து கொண்டிருக்கிறார். இது நியாயமானதாவென மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

1957 ம் ஆண்டில் பண்டா-செல்வா ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தஇடமளித்திருந்தால்இன்றை நிலைமைகள் ஏற்பட்டிராது'' என்றார்.

# "இன்று நடக்கும் ஆர்ப்பாட்டப் பேரணிக்கு ஆதரவு வழங்குக" - புளொட் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், புதன்.

''அரசு தனது இராணுவ ஆட்சியைத் திணிக்கும் ஒரு அம்சமாக் கொழும்பு செல்லும் வாகனங்களை இராணுவ முகாமில் 'பாஸ்' பெறவேண்டும் என்ற புதிய அடக்குமுறைச் சட்டத்தை இயற்றியுள்ளது. இந்தச் சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இன்று வடபிராந்திய லொறிப் போக்குவரத்துச் சங்கமும், யாழ் முஸ்லிம் போக்குவரத்துச் சங்கமும் இணைந்து நடத்தும் ஆர்ப்பாட்டப் பேரணியில் அனைத்து மக்களும், வெகுஜன அமைப்புக்களும் கலந்து கொண்டு தங்கள் எதிர்ப்பை அரசுக்குதெரிவிக்க வேண்டும்''

இவ்வாறு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அவ்வறிக்கையல் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது!

''எமது விடுதலைப் போராட்டம் நெருக்கடியான நிலையிலும் முன்னேறிவரும் இவ்வேளையில் போராட்டத்தில் இணைகள்ள மக்களை அந்நியப்படுத்தும் முயற்சியில் அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இந்தவகையில் லொறி, பஸ் போன்ற வாகனங்களைத் தடுத்துப் பொருளாதாரத்தடையை மேற்கொண்டு விடுதலைப் போரை ஒடுக்க முடியுமென அரசு கனவுகண்டு செயற்படுகிறது. எனவே எந்தவகையான தடைகளை மேற்கொண்டாலும் எமது விடுதலைப் போரை ஒடுக்கமுடியாது என்பதனை அரசிற்கும் சர்வதேச நாடுகளுக்கும் எடுத்தியம்புவோம்'' [து]

# சூழ்நிலையைச் சாதகமாக்கி மதமாற்றம்

## இந்து ஸ்தாபனங்களின் அமைப்பு கண்டனம்

யாழ்ப்பாணம், புதன்

நாட்டில் ஏற்பட்டுள்ள இன்னல்கள் காரணமாக அவதிக்குள்ளாகியுள்ள அகதிகளுக்கும் அநாதைச் சிறுவர்களுக்கும் ஏற்பட்டுள்ள இக்கட்டான நிலைமையைச் சாதகமாகக் கொண்டு ஒருசில இடங்களில் மதமாற்றம் இடம் பெறுவதை இலங்கையிலுள்ள இந்துக் கோவில்களினதும், தாபனங்களினதும் பாதுகாப்புக்கான அமைப்பு கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது

அண்மையில் இவ்வமைப்பின் கூட்டம் நல்லை ஆதீனத்தில் சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார் இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

'சூழ் நிலையைச் சாதகமாகப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் மதமாற்றம் சம்பந்தமாக எமது அமைப்பு கவனம் செலுத்தி வருகிறது, இத்தகைய நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறுவது தமிழ்மக்களிடையேயும் அவர்களினல் பேணப்படும் சமயங்களிடையேயும நிலவும் சமாதான உணர்வுக்குப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தலாம். இந்த எண்ணத்தை சர்வமதங்களும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

'அரசாங்க பொறுப்பதிகாரிகள், சமூக சேவையாளர்கள் அகதிமுகாம் பொறுப்பதிகாரிகள் மதமாற்றங்களை மறைமுகமாகவோ, நேரடியாகவோ நடைபெறுவதற்கு இடமளிக்சக் கூடாது, எனக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

'கோயில்களில் ஏற்பட்டுள்ள களவுகளை ஆராய்ந்த அமைப்புக்குழு, மக்கள் கோயில்களை தமது உடமைகளிலும் பார்க்க மேலாக மதித்து பாதுகாத்து தீயசகதிகளிலிருந்து பாதுகாக்கவேண்டும்.

''பல ஆலயங்கள் மகோற்சவம் நடைபெற முடியாத நிலையிலும், சில நித்திய பூசைகள் நிறைவேற்ற முடியாத நிலையிலும் இருக்கின்றன. இவை இந்துக் கோவில்கள் சிதைக்கப்படுவதாகக் கருத வேண்டியதே, இவை பற்றி ஜனதிபதிக்கு தெரிவித்து கோவில்கள் இருக்கின்ற இடங்களிலுள்ள இராணுவ முகாம்களை அகற்ற வேண்டும்.

''மாவிட்டபுரம் மகோற்சவத்தின்போதும், ஆடி அமவாசை விரத தினத்திலும் இராணுவ நடமாட்டத்தை முற்றாகக் கட்டுப்படுத்த வேண்டும் இவ்வுற்சவக்காலத்தில் போக்குவரத்து வசதிகளை நல்ல முறையில் நடாத்த வேண்டும்'' (ஐ)

## நல்லூர் ஆசீர்வாதப்பர் தேவாலய புனருத்தாரணம்

யாழ்ப்பாணம், புதன்

நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் தேவாலயத்தின புனருத்தாரணத் திருப்பணிக்கான அத்திபாரக்கல்லை யாழ். ஆயர் அதிவந். தியோகுப்பிள்ளை ஆண்டகை அண்மையில் நட்டிவைத்தார்.

பல லட்சப ரூபா செலவில் நடைபெறவுள்ள இத்திருப்பணிக்கான அத்திபாரக்கல் புனித ஆசீர்வாதப்பர் பெருநாளின் இறுதித் தினமான சடந்த 11ந் திகதி நாட்டப் பெற்றது.

இவ்வைபவத்தில் மேற்படி ஆலய பங்குத்தந்தை வண பிதா ஜோசப் அடிகள், ஆசீர்வாதப்பர் ரோகினி வித்தியாலய அதிபர் அருட் சகோதரி லைசா உட்படப் பல அருட் சகோதர சகோதரிகள் கலந்து கொண்டனர். (ஐ)

## யாழ். பல்கலைக்கழக இலக்கியப் போட்டி முடிவு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அகில இலங்கை ரீதியாக நடாத்திய இலக்கியப்போட்டிகளில் பரிசு பெறுவோர் வருமாறு:

கவிதை: கலைமணி க. த. ஞானப்பிரகாசம், திரு வே. கணபதிப்பிள்ளை, திரு. நா.க. சண்முகநாதபிள்ளை.

சிறுகதை: பரமேஸ்வரி பாலசிங்கம். திருமதி கோகிலா மகேந்திரன், தாமரைச் செல்வி

குறுநாவல்: செல்வி ஷாந்த சௌரி முத்துச்சாமி, கோப்பாய் சிவம், செல்வி இ சிவ பூஷணி. (ஐ)

பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க் ★ ஜேர்மனி
★ பிரான்ஸ் ★ கனடா

நேரடியான உடனடிப் பிரயாணம்

நாளுக்கு நாள் பயணமாகிக்கொண்டிருக்கிறார்கள். உடனடியாக எமது காரியாலயத்தில் தொடர்புகொள்ளவும்.

குவைற்;
டிரைவர்[Driver] பணிப்பெண்
சவுதி அரேபியா
கிளினேர்ஸ்

உடனடி பிரயாண ஒழுங்கு செய்துகொடுக்கப்படும். அத்துடன் பாஸ்போட், பொன்ட், விசா, ரிககட்டிங் என்பனவும் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

Group Atlantic Travels
163, HOSPITAL, ROAD, JAFFNA. (A797)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

புதன்கிழமை 16-7-86

## "மன்னார் அடம்பனில்
# முஸ்லிம்கள் ஏழு பேரை கடைக்குள் போட்டு தீயிட்டனர்!"
## காயப்பட்டு தப்பிவந்த பெண் தகவல்!!

யாழ்ப்பாணம், புதன்

"ஒரே குடும்பத்தைச் சேர்ந்த முஸ்லிம்கள் ஏழுபேரை கடையொன்றினுள் போட்டு எரித்தனர். இரண்டுவயதுள்ள சிறுவனை அடித்துவிட்டு நெருப்பில் தூக்கி எறிந்தார்கள்."

இவ்வாறு யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் மன்னாரைச் சேர்ந்த திருமதி செபஸ்தியாம்பிள்ளை தவமலர் (வயது 47) தெரிவிக்கின்றார்.

அடம்பன் வேப்பங் குளத்தைச் சேர்ந்த இவர், அடம்பனில் இராணுவத்தினருக்கும் போராளிகளுக்குமிடையே நிகழ்ந்த சண்டையினால் அடம்பனில் பொதுமக்கள் சுமார் 75 பேர்வரை இறந்திருப்பார்கள் எனத் தெரிவிக்கிறார்.

ஆண்களே அதிகம்பேர் இறந்தவர்களாவர் எனவும் கணிசமானளவு பெண்கள், குழந்தைகள், இறந்திருக்கிறார்கள் எனவும் அவர் கூறினார்

அப்பெண்மணி மேலும் கூறியதாவது:

"ஷெல் அடித்ததினாலும் விமானக் குண்டு வீச்சினாலும் வீடுகள்பல சேதமடைந்துள்ளன. அடம்பன் பகுதியைச் சுற்றிவளைத்து இராணுவத்தினர் முற்றுகையிட வந்தனர்.

"இச்சமயம்பொதுமக்கள்அல்லோல கல்லோலப்பட்டுசிதறி ஓடினார்கள். நானும் வீட்டைவிட்டு ஓடியபோது எனது காலில் குண்டுபட்டது" (ஐ)

## பருத்தித்துறையில் இராணுவம்சுட்டு ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், புதன்

பருத்தித்துறையில் சுங்கக் காரியாலயத்தில் உள்ள இராணுவத்தினர் சுட்டதில் ஒருவர் காயமடைந்தார். ஷெல்அடித்ததினால் ஒருவீடு சேதமாகியுள்ளது.

நேற்றுக்காலை 10 மணியளவில் நடைபெற்ற இச்சம்பவத்தில் பருத்தித்துறை சித்திவிநாயகர் சந்திவரை, வந்த இராணுவத்தினரைப் போராளிகள் நேரடியாகச் சந்தித்துமோதியதில் இராணுவத்தினர் முகாமுக்குத் திரும்பிவிட்டனர்.

கந்தரோடை வீதியிலுள்ள வீட்டு வளவில் இருந்த தென்னை மரத்தில் ஷெல் தாக்கி வீடு ஒன்றின்மீது வீழ்ந்து அவ் வீட்டைச் சேதமாக்கியுள்ளதாகத் தெரியவருகிறது. (ஐ)

## தனியார்கடைகளில் மருந்து தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், புதன்

கொழும்புக்குயாழ்ப்பாணத்திலிருந்து லொறிச் சேவை நடைபெறாததால் யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் மருந்துக் கடைகளில் மருந்துவகைகள் சிலவற்றுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிகிறது. (ஐ

## முல்லைத்தீவில் இராணுவம் மீது தாககுதல்

ஒட்டுசுட்டான், செவ்

முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட இருநூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர்மீது ஈ பி. ஆர். எல். எவ் போராளிகள் தாக்குதல் நடத்தினர். இச்சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றது.

முகாமிலிருந்து சிலாவத்தை என்னும் இடத்தைநோக்கி இராணுவத்தினர் வருவதைக் கண்டு போராளிகள் நடத்திய கடுமையான தாக்குதலினால் இராணுவம் பின்வாங்கியது. இத்தாக்குதல் பலமணிநேரம் நீடித்தது.

இதனால் இராணுவ தரப்பில் இருவர் கொல்லப்பட்டதாகவும் பலருக்கு காயம் ஏற்பட்டதாகவும் அறியப்படுகிறது.

இச்சம்பவத்தினால் யாழ்ப்பாணத்திலிருந்து மட்டுநகர், அனுராதபுரம், வவனியா செல்லவிருந்த பஸ்கள் முல்லைத்தீவு பஸ்டிப்போவில் தரித்து நின்று பிற்பகல் புறப்பட்டன.

## சூட்டுக்குப் பலி!

[மூதூர்]

மாலை நேரம் கடைக்குப் பொருள்கள் வாங்கச்சென்ற சிங்கள ஆடைதைப்பவர் ஒருவர்துப்பாக்கிச் சூட்டுக்குப்பலியானார்.

நேற்று முன்தினம் மாலை இச்சம்பவம் இடம்பெற்றது.

திருமலை மாவட்டத்திலுள்ள பாலை ஊற்றுக்கிராமத்தைச் சேர்ந்த ஜூலியன் தெரன் பெர்னாண்டு [55 வயது] என்பவரே பலியானவராவார். [மா]

## 80 வேலைநிறுத்த 6-வது ஆண்டு: நாளை கச்சேரி முன்பாக மறியல் போராட்டம்!

யாழ்ப்பாணம், புதன்

1980ம் ஆண்டு ஜூலைமாதம் நடைபெற்ற பொதுவேலை நிறுத்தம் தொடர்பாக நாளை வியாழக்கிழமை யாழ். கச்சேரி முன்பாக மறியல்போராட்டம் ஒன்றை வடபிரதேச தொழிற் சங்கங்கள் இணைந்து நடாத்தவுள்ளன.

வியாழக்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் 1 மணி வரை இந்தமறியல் போராட்டம் நடைபெறும்.

இம்மறியல் போராட்டம் சம்பந்தமாக வட பிரதேச தொழிற்சங்கங்கள் இணைந்து வெளியிட்டுள்ளதுண்டுப் பிரசுரத்தில்;

நாளை வியாழக்கிழமை நடைபெறும்மறியல் போராட்டத்தில் அனைவரும் அணி திரள்வோம்.

1980 ஜூலை வேலைநிறுத்தக்காரர் அனைவரையும் நிபந்தனையின்றி வேலைக்கமர்த்தும்படி வற்புறுத்துவோம்.

வேலைக்கமர்த்தப்பட்டோரை பழிவாங்குவதை நிறுத்தி சகல உரிமைகளையும் வழங்கும்படி நிர்ப்பந்திப்போம். என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (வா

## பதவிவிலக வேண்டிய அவசியமில்லை

சென்னை, செவ்

"மலையக மக்களின் நலன் களை கவனிக்கவே இலங்கை அரசின் அமைச்சரவையில் நான் அங்கம் வகிக்கிறேன் எனவே அந்த அமைச்சரவையிலிருந்து நான் பதவிவிலக வேண்டிய அவசியமில்லை" இவ்வாறு கிராமிய சிறுகைத் தொழில் அமைச்சர் தொண்டமாண் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் நேற்றுமுன் தினம் ஞாயிற்றுக்கிழமை பத்திரிகையாளரிடையே இதனை அவர் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறியதாவது; இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு ஏற்பட சம்பந்தப்பட்ட. தரப்பினர் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் செயல்பட வேண்டுமெனவும் வலியுறுத்தினார். (ய-செ]

## இன்று போக்குவரத்துச் சங்கங்கள் எதிர்ப்புத் தினம்
### ஹர்த்தால், ஆர்ப்பாட்ட பேரணி

யாழ்ப்பாணம், புதன்

வடபிராந்திய லொறிப் போக்குவரத்துச் சங்கமும், யாழ் முஸ்லிம் போக்குவரத்து ஒன்றியமும் இன்று இணைந்து நடாத்தும் ஆர்ப்பாட்டப்பேரணிக்கு பூரண ஆதரவு வழங்குமாறு தமிழ்ப்பேசும் மக்கள் கேட்கப்பட்டுள்ளார்கள்.

இதுகுறித்து துண்டுப்பிரசுரமொன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

"யாழ் மாவட்டத்தில் உணவுப் பற்றுக்குறை தலைதூக்காவண்ணம் பாதுகாத்துவருவது லொறித் தொழிலாளர்களின் அயராத உழைப்பும், துணிச்சல்மிக்க விடாமுயற்சியுமாகும். லொறித் தொழிலாளர்கள் தமது உயிரை துச்சமென மதித்து, பல பேராபத்துக்களின் மத்தியிலும் பொதுமக்களின் அன்றாட தேவைகளைப் பூர்த்திசெய்கிறார்கள். இதை நன்கு அறிந்துகொண்ட அரசு. தனது கோட்பாட்டை நிலைநிறுத்த யாழ் - கொழும்பு போக்குவரத்துக்கு பலாலி இராணுவ முகாமிலும், கோட்டை இராணுவ முகாமிலும் அனுமதி பெறுல் மட்டுமே கொழும்பு போக்குவரத்தில் வாகனங்கள் ஈடுபட முடியும் என்று அறிவித்துள்ளது

"எவ்விதபாதுகாப்பும்அற்ற நிலையில், பலாலி, கோட்டை இராணுவ முகாம்களுக்குச் சென்று 'பாஸ்' பெற்று ஆனையிறவு தடைமுகாம் தாண்டுவது இல்லையென்று லொறி, பஸ் உரிமையாளர்கள் எடுத்த தீர்மானத்திற்கு எமது முழு ஆதரவு தெரிவித்தும், பழைய நடைமுறைப்படி போக்குவரத்தை நடைமுறைப்படுத்தும்படி அரசாங்கத்தை வேண்டுகிறோம்." [வா]

## யாழ்.பல்கலைக்கழக மறுமலர்ச்சிக்கழக போட்டிகள்

யாழ்ப்பாணம், புதன்

"தமிழீழவிடுதலைப் போராட்டத்தில் மக்களின் பங்கு" என்னும் பொருள்பற்றி கட்டுரை, கவிதை, சிறுகதை பற்றிய போட்டிகளை யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகம் நடாத்தவுள்ளது.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 15ம் திகதி இப்போட்டிகளின் முடிவுதினமாகும் என்று மறுமலர்ச்சிக் கழகச் செயலாளர் அறிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்கள், ஏனையோர் என இருபிரிவுகளாக இப் போட்டிகள் இடம் பெறவுள்ளதாகவும் சிறந்த ஆக்கத்துக்குப் பரிசுகள் வழங்கப்படும் என்றும், ஆக்கங்களை "செயலாளர், மறுவலர்ச்சிக்கழகம், யாழ் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்" என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படியும் செயலாளர் தெரிவிக்கிறார். [மா]

## மரண அறிவித்தல்

### விசுவலிங்கம் புஷ்பராசலிங்கம்

இளைப்பாறிய அரச மா ஆலைக்கூட்டுத்தாபன உத்தியோகத்தர் புஷ்பராசலிங்கம் காலமானார் இவர் காலஞ்சென்ற ஒப்பந்தகாரர் விசுவலிங்கத்தின் மூத்த புதல்வரும், சித்தங்கேணி முன்னாள் விதானையார் நடராசாவின் பெருமகள் சாரதாம்பாளின் அன்புக் கணவரும், கமலினி (பண்டத்தரிப்பு மகளிர் வித்தியாலய மாணவி), மகிழினி ஆகியோரின் தந்தையும், பஞ்சலிங்கம் (ஓமான்), சுந்தரலிங்கம் (Hebtulabhoy, Colombo), பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், மகாதேவன் (வரி மதிப்பாளர், உள்நாட்டிறைவரி, கொழும்பு), மகாலட்சுமி, ராதாமணி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற ஓவசியர் சின்னத்துரை, காலஞ்சென்ற பொன்னுத்துரை, முன்னாள் கிராம சபைத்தலைவர் மார்க்கண்டு, சுதுமலை வர்த்தகர் சின்னட்டித்தம்பி ஆகியோரின் பெருமகனும், தையல்நாயகி, மீனாட்சிப்பிள்ளை ஆகியோரின் மருமகனும் ஆவார். அன்னாரது மரணச்சடங்குகள் சித்தங்கேணியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (16 - 7 - 86) புதன் கிழமை நடைபெற்று பூதவுடல் காலை 10 மணிக்கு வழுக்கையாறு மயானத்துற்கு எடுத்துச்செல்லப்பட்டுத் தகனம் செய்யப்படும். (C3503)

### திருமதி நாகரத்தினம் சிவராஜா

திருமதி நாகரத்தினம் சிவராஜா காலமானார். இவர் திரு சிவராஜா [முன்னாள் முகாமையாளர், N வைத்திலிங்கம் அன கொம்பனி லிமிட்டெட், கொழும்பு) அவர்களின் அருமை மனைவியும், ஜெகதீஸ்வரி [இந்தியா], Dr. பாலச்சந்திரன் (U. K.) சரோஜினிதேவி (ஆசிரியை, மறைஞானசம்பந்த வித்தியாலயம் தோப்புக்காடு], ஜெகதீஸ்வரன் (Saudi Arabia], மங்களேஸ்வரி [நைஜீரியா], தவனேஸ்வரி, சாவித்திரிதேவி ஆகியோரின் அன்புத்தாயாரும், பஞ்சலிங்கம் [Air Lanka Colombo]. வசந்தாதேவி [U. K] குணசிங்கம் [Radio Officer], மகேஸ்வரி, சிவலிங்கம் [Nigeria), ஸ்ரீநிவாசன் (Bank of Ceylon, Colombo), சுபாஸ்கரந்தன் (Oman) ஆகியோரின் மாமியாரும், மஞ்சுளா, ரவி, வாணி, அனுஷா, சசிரூபன், பிரகாஷ், காலஞ்சென்ற சுகன்யா, சுரேந்திரன், ஸ்ரீஹரன், திலீபன், சுதர்ஷன், பிரஷாந்த், பிரதீபன். நிஷாந்தி ஆகியோரின் ஆசை பேத்தியுமாவார். ஈமக்கிரியைகள் இன்று (16-7-86) மாலை 3 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக சங்கானை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

T. சிவராஜா.

தேவாலய வீதி,
சங்கானை.

(C 3505)

### வெலிச்சோர் அருளப்பு

பருத்தித்துறையை பிறப்பிடமாகக் கொண்ட வெலிச்சோர் அருளப்பு காலமாகிவிட்டார்.

இவர் எலிசபெத்தின் அன்புக்கணவரும் மரியறெஜீனா, வேதநாயகம், செபஸ்ரியன், அன்னமேரி, சங்கைக்குரிய சகோதரி பொன்றேஸ் (Gertrude தோலகட்டி, மௌனசபை), சங்கைக்குரிய சகோதரி பிளசம் (Methilda - யாழ் டொண் பொஸ்கோ கன்னியர்மடம்), கெலன், அருட்திரு யேசுதாஸ் அடிகளார் [கொழும்பு],அலோசியஸ் [சவூதி அரேபியா] ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மணற்காடு சேமக்காலையில் [16 - 7 - 86] பிற்பகல் 3 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும்.

மணற்காடு, குடத்தனை. [C-3494]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜூலை மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24120.